NEWS MART, 1, NAGAPPA CHETTY ST.

மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 6—இதழ் 20 ★ 15-9-57 சென்னை ★ விலை 16 காசு

"இன்பத் திராவிடம்!"

——(0)——

எங்கும் நிறை நாதமாகிறது.

——(0)——

காலம் கனியும்; கனவு நனவாகும்!

——(0)——

காலங் கனிந்து வருகிறது, கழகத்தின் கொள்கைகள் நாடெங்கும் பரவி வருகின்றன!

திராவிடநாடு பற்றி முதலில் பேசத் தொடங்கிய பொழுது எவ்வளவு எதிர்ப்புகள், ஏச்சுகள் பேச்சுகள் அள்ளி வீசப்பட்டன! நாட்டைக் கெடுப்பவர்கள், நாசகாலர்கள் என்றெல்லாம் தூற்றினார்கள்!

திராவிடம் என்றால், திரா விடம் என்று கேலி செய்தவர்கள் உண்டு!

வடக்கு-தெற்கு என்று பேசினால், எல்லாம் வரட்டு வேதாந்தம் என்று அலட்சியமாகப் பேசினார்கள்!

ஆனால் இன்று அவர்களால் நமது கொள்கையை அலட்சியப்படுத்த முடியாது. இருந்தாலும் ஓரிருவர் விட்டகுறை தொட்ட குறையாக, முன்பு இருந்ததைப் போலவே ஆணவப் போக்கில் அறியாச்சிறு உரைகளைக் கழறிய வண்ணம் உள்ளனர். அது அவர்களுக்கு அவசியமாயிருக்கிறது, அவர்கள் வகித்து வரும் பதவிகளுக்கு அவசியமென நினைக்கின்றனர். அவர்கள்கூட கழகத்தின் கொள்கைகளை காரண காரியங்களைக் காட்டி மறுத்துப் பேசுவதில்லை, அப்படி முடியாத காரணத்தால்!

அவர்கள் காட்டிய அலட்சியத்தை மீறி, ஆணவத்தை மீறி, அவர்கள் போட்ட தடைகளை மீறி, அடக்குமுறைகளை மீறி கழகம் வளர்ந்து வருகிறது, கழகத்தின் கொள்கைகள் பரவி வருகின்றன! பக்கத்து வீட்டுக்காரன் மீது கடுமையான கோபம் இருந்த போதிலும், அவன் தோட்டத்திலிருக்கும் முல்லையின் நறு மணம் காற்றில் கலந்து வரும்பொழுது, தம்மையும் அறியாமல், அவ்வாறு நறுமணத்தைத் தருகிற முல்லைச்செடி நமக்குப் பிடிக்காதவன் தோட்டத்தில் இருக்கிறதே என்பதையும் மறந்துவிட்டு, "ஆகா! முல்லையின் நறுமணம் என்னே!" என மனமகிழ்வுடன் கூறிக் கொள்வர். அது போல, நம்மைப் பிடிக்காதவர்கள் கூட, நம்மைத் தமக்கு மாற்றார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தவர்கள் கூட, சில வேளைகளில் தம்மையும் மறந்து, நமமையும் மறந்து, "ஆமாம்; அப்படிக் கூறுவதிலும் உண்மையிருக்கிறதே! வடநாட்டுக்கு எல்லாம் செய்யப்படுகிறது, தென்னாட்டுக்கு ஏதுங்கிடையாதா?" என்று கேட்டுக்கொள்ள ஆரம்பித்தனர்.

சிறியதொரு விதையை எவ்வளவு ஆழத்தில்போட்டாலும் அதன்மீது எவ்வளவு தான் தரையைக் கெட்டியாக இடித்து வைத்திருந்தாலும், அதன் மீது பாரையைப் போட்டுத் தடுத்து வைத்தாலும், கடைசியாக ஆழத்தில் பதிக்கப்பட்ட விதை மண்ணைத் தள்ளி, கற்பாறையைப் பிளந்து, தரைக்கு மேல் முளை நீட்டி, இதழ் பிரிந்து, செடி வளர்ந்து பெருமரமாக வளரும்! அதைப்போல, பழி என்ற மண் எவ்வளவு தான் மேலே மூடிய போதிலும் தடைகள் என்ற பாறைகள் எவ்வளவு தான் தடுத்த போதிலும் அவைகளையெல்லாம் மீறி கழகத்தின் கொள்கைகள் அரும்பு விடத்தொடங்கியிருக்கின்றன.

முன்பு திராவிட மென்றால் ஆகாது கூடாது என்று வெறுத்து ஒதுக்கியவர்கள் கூட இன்று அதைப் பற்றிப் பேசிடக் காண்கிறோம். முன் வட நாடு-தென்னாடு என்றால் வெறும் சொல்லடுக்கு என்று அலட்சியப்படுத்தியவர்கள், இப்பொழுது "தென்னாட்டுக்கு நியாயம் கிடைக்க வில்லையே" எனப் பிரித்துப் பிரித்துப் பேசுகின்றனர். கழகம் கொண்ட இலட்சியம் பரவி வரும் வேகத்தைக் குறிக்கிறது அது!

"திராவிடத்தைக் காப்போம்!" கல்கி எழுதுகிறது. பத்தாண்டுகளுக்கு முன் அவ்வாறு அந்த ஏடு எழுதியது கிடையாது!

"நெஞ்சுபொறுக்குதில்லையே!" என்ற தலையங்கத்தை ஆனந்தவிகடன் தீட்டுகிறது. ஐந்தாண்டுகளுக்கு முன், "தென்னாட்டுக்குப் பெருத்த அநீதி இழைக்கப்பட்டுள்ளது!" என்று விகடன் வெளியிட்டது இல்லை. "ஒரே இந்தியா, எல்லோரும் ஒன்றுதான்!" என்ற எண்ணம் வலுப்பெற்றிருந்த காலத்தில், "தென்னாட்டுக்கு அநீதி" எனப் பிரித்துப் பார்க்கும் எண்ணம் எழவில்லை!

வடநாட்டுக்கு எதிரில் எல்லா உணவுப் பண்டங்களையும் படைத்துவிட்டு தென்னாட்டுக்கு வெற்றுத் தட்டையும் வறுமைப் பார்வையும் தந்திடும் பரிதாபச் சித்திரங்களைச் சுதேசமித்திரன் வரைகிறது. ஒரே இந்தியா என்ற எண்ணமிருந்தால், பருத்தால் எல்லோரும் பருத்தவர்கள், இளைத்தால் எல்லோரும் இளைத்தவர்கள் என்று எண்ணம் வருமேயன்றி, வடநாட்டுக்காரர்கள் பருத்தும், தென்னாட்டுக்காரர்கள் இளைத்தும் இருப்பது தெரியாது. நாம் "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" எனச் சிறிது ஒழுங்குடன் சொன்னோம். மித்திரன் போன்றவர்கள் "வடநாட்டுக்காரர்கள் உண்டு கொழுக்கிறார்கள், தென்னாட்டுக்காரர்கள் சோற்றுக்கில்லாமல் திண்டாடுகிறார்கள்!" என்று, சொன்னால்கூடப் புரியாது என்று படம் போட்டுக் காட்டுகிறார்கள்.

வடநாடு-தென்னாடு எனப் பிரிக்கப்பட்டிருக்கும் உயர்வு-தாழ்வை யாராலும் மறுக்கமுடியவில்லை. இரண்டுக்குமிடை உள்ள வேற்றுமைகளைப்பற்றி அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களும் பேசுகிறார்கள்.

"இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்து வேறுபட்ட பகுதியாகத் தென்னாடு இருக்கிறது. இந்த வேற்றுமைத் தெளிவாக உள்ளது." என்று பொருளாதார நிபுணர் டாக்டர் ஜே. பி. தாமஸ் என்பவர் கூறினார். திரு. தாமஸ் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவரல்ல. அவர் கூறுகிறார் "தென்னாடு தனிப்பட்டபகுதி, மத்திய அரசாங்கம் அதைச் சரிவரக் கவனிப்பதில்லை. தென்னாட்டுக்கு அதிகமான தொழில் வளர்ச்சி வசதிகள் தரவேண்டும்" என்று.

டாக்டர் தாமஸ் தென்னாட்டுக்காரர், ஒருவேளை அவர் தன்பகுதியை மட்டும்மனதில் வைத்துக் கூறினாரா என்றால், இல்லை என்று சொல்லும் விதத்தில், 'ஈஸ்டர்ன் எகானமிஸ்ட்' என்ற வடநாட்டுப் பொருளாதாரப் பத்திரிகையின் ஆசிரியரான டா கண்டா என்பவர், "தென்னாடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ளது. 'அதற்குத் தனியாக நிதி ஒதுக்கவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

பொருளாதார நிபுணர்களைவிட்டுக் கலைத்துறைக்குச் செல்லுங்கள். "வெளிநாடு செல்லும் கலைக்குழுக்களில் தென்னாட்டினருக்கு உரியபங்கு தரப்படுவதில்லை" என்று தென்னாட்டு நடிகர்கள் கூறுகிறார்கள்.

தென்னாட்டிலிருக்கும் நடிகர்கள் ஏதாவது, அரசியலில் அதிகம் ஈடுபடுகிறார்கள் என்ற "குற்றச்சாட்டு" வரலாம். இன்னும் அப்பால் நகர்ந்து பார்த்தால்கூட தென்னாடு வடநாடு வேற்றுமை சுட்டிக்காட்டப்படுவது

(2-ம் பக்கம் பார்க்க)

<u>அறிஞர் அண்ணா:</u>

அறிஞரும் கலைவாணரும் (2)

அறிஞர் அண்ணாவும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களும் முதலில் சந்தித்ததிலிருந்து மிகப் பாசத்தோடு பழகியவர்கள். 1944ல் மிகத்தவறான போக்கில் கலைவாணர் அவர்கள் ஒருகுற்றத்தில் சம்பந்தப் படுத்தப்பட்டுச் சிறைப் படுத்தப்பட்டார். அப்பொழுது அண்ணா அவர்கள் திருச்சியில் இருந்தார். என். எஸ். கே. இரண்டொரு நாட்களில் திருச்சி வருவதாகச் சொல்லி, சுற்றுப்பிரயாணத்திலிருந்த அண்ணா அவர்களைத் திருச்சியில் சந்திப்பதாகக் கூறியிருந்தார். அதனால் சுற்றுப்பிரயாண முடிவில் திருச்சியில் தங்கிய அண்ணா அவர்களுக்கு, பேரிடிபோல், 'கலைவாணர் கைதுசெய்யப்பட்ட செய்தி' எட்டியது. விரைந்து சென்னைவந்தார், கலைவாணர் கைது செய்யப்பட்டது ஆறாத்துயரில் ஆழ்த்தியது.

செய்தி கேட்டதிலிருந்து, இரண்டு மூன்று நாட்கள் ஏதும் உண்ணாமல் படுத்த படுக்கையாகவே அண்ணா இருந்தார். பின் நண்பர்கள் கட்டாயப்படுத்தி, சிறிது உண்ணச் செய்தார்கள். இரண்டு வாரத்துக்கெல்லாம் அவருடைய தோற்றமே மாறிவிட்டது. தாடி மீசை வளர்ந்து சாமியார் போலாகிவிட்டார். எப்பொழுதும் அதே நினைவில், இரவுநேரங்களில் உறக்கங்கூடப் பிடிக்காமல் இருந்தார். மனவேதனை தாளமுடியாமல் எப்படியாவது எல்லாவற்றையும் மறந்தால்போதும் என்ற எண்ணம் உண்டானது. அந்த மனவேதனையினால், அதற்கு முன் எப்பொழுதுமே உண்டாகாத எண்ணம் உண்டானது. "மதுவைக்குடித்து, எல்லாவற்றையும் மறந்தால் என்ன?" என்றஎண்ணம் பிறந்து, அந்த வகையில் பழக்கமுடைய ஒருவரைக் கேட்டார். நல்லவேளையாக அந்த நண்பர் அதைத்தடுத்து "மதுவைக்குடித்தால் எதையும் மறந்துவிடமுடியாது, இருக்கின்ற உணர்வை அது அதிகப்படுத்தும். துக்கமுடையவன் குடித்தால் அவனுடைய துக்கம் அதிகமாகத் தெரியும்; மகிழ்ச்சியாக இருப்பவன் குடித்தால், அவனுடைய மகிழ்ச்சி அதிகரித்து இருப்பதாகத் தோன்றும். இருக்கின்ற மனநிலையை மது அதிகமாக்கிக்காட்டுமே ஒழிய, இருப்பதை மாற்றிவிட முடியாது; ஆதலால் அதுவேண்டாம்!" என்று சொன்னார். அப்பொழுது ஒரு கணம் ஏற்பட்ட வெறுப்புணர்வு, நல்லவேளையாக நண்பரால் வேறுவகையில் திரும்பாதபடி தடுக்கப்பட்டது. பின் கலைவாணர் மீது சுமத்தப்பட்ட வழக்கில் வாதிட, பிரபல வழக்கறிஞர்கள் முன்வந்து, நம்பிக்கை தந்தபொழுது, அண்ணா ஆறுதலடைந்தார்.

வழக்கு ஆரம்பமாகும் நிலையில் என். எஸ். கே. அவர்களை சிறைச்சாலையில் பார்க்க அண்ணா அவர்கள் சென்றிருந்தார்கள். அண்ணாமிகவும் கலக்கத்துடன் இருந்தார். என். எஸ். கே. அவர்கள், "அண்ணா! நீங்கள் 'வேலைக்காரி' நாடகத்தில் எழுதியிருக்கிறீர்களே, 'சட்டம் ஒரு இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு பிரகாசமான விளக்கு, ஏழையால் பிரகாசமான விளக்கைப் பெறமுடியாது' என்று. நீங்கள் எழுதியது ரொம்பசரி! இப்பொழுது நம்மிடம் கொஞ்சம் பணமிருக்கிறது. ஆக அந்த இருட்டறையில் ஒரு பிரகாசமான விளக்கைவைத்துப் பார்க்கலாம்!" என்று சொன்னார் என். எஸ். கே. சிறைக்குப்போவதற்குமுன், அவருடைய நாடக சபையில் அண்ணாவின் "வேலைக்காரி" நாடகத்தை அரங்கேற்றுவதாக இருந்தது. அதற்காக "வேலைக்காரி" நாடகத்தை வாங்கிவைத்திருந்தபோது, என். எஸ். கே. அவர்கள் பலமுறை படித்து மகிழ்ந்திருக்கிறார்.

கலைவாணர் விடுதலையாகி வெளிவந்த நேரத்தில், கே. ஆர். இராமசாமி அவர்களின் நாடகசபை தஞ்சாவூரில் அண்ணாவின் நாடகங்களை நடத்திக்கொண்டிருந்தது. விடுதலையான கலைவாணருக்கு கே. ஆர். ஆர். அவர்கள் தமது நாடகசபையில் அண்ணா தலைமையில் வரவேற்பு அளித்தார். அப்பொழுது என். எஸ். கே. அவர்கள் வேடிக்கையாகப் பேசினார், "என்வீட்டில் ஒரு வேலைக்காரி இருந்தாள். நான் சிறைக்குச் சென்றிருந்த பொழுது, இந்த இராமசாமி அவளை இழுத்துக்கொண்டு தஞ்சைக்கு வந்துவிட்டான். ஒன்றும் வித்தியாசமாக நினைத்துக்கொள்ளாதீர்கள். நான் சொல்லுவது 'வேலைக்காரி' நாடகத்தை!" என்று சொன்னார்.

"இன்பத் திராவிடம்!"

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறது. எடுத்துக் காட்டாக, சாரணர் அமைப்பை எடுத்துக்கொள்ளலாம். "ஸ்கௌட்ஸ்" என்று காக்கிச்சட்டை அணிந்துகொண்டு பையன்கள் செல்வார்களே, அந்த அமைப்பில் சற்று வயது வந்தவர்களுக்கு இருப்பது சாரணர் அமைப்பு. உதகமண்டலத்தில் தென்னிந்திய சாரணர்கள் மாநாடு கூடியது. அதில் மைசூர் மாநிலச் சாரணர் தலைவர் பேசுகிறார் "டில்லியிலுள்ள சாரணர் தலைமைப்பீடம் வடநாடு என்றால் சலுகைகள் தந்தும், தென்னாடு என்றால் எதுவும் தராமலும் நடந்துவருகிறது. தென்னாட்டினர் உரிமைகளை நாம் ஒன்றாக இருந்து வலியுறுத்த வேண்டும்!" இவ்வாறு அவர்மற்ற மூன்று தென்னாட்டு மாநில சாரணர் அமைப்புகளையும் கேட்டுள்ளார். இந்தக்குரல், அரசியலுக்கு மிகமிக் அப்பாற்பட்ட சாரணர் கூடாரங்களிலிருந்து எழுகிறது! கதர்ச் சட்டையைப் பிடிக்காத காரணத்தால் கருப்புச்சட்டையோ, கருப்புச் சிவப்புக் கலரோ கூறுவதல்ல இது! எல்லாவற்றையும் தள்ளி இருக்கிற காக்கிச்சட்டை அவ்வாறு கூறுகிறது!

தென்னாடு வடநாடு என்ற வேற்றுமை பல அமைப்புகளிலும் வந்துவிட்டது.

தென்னிந்திய பத்திரிக்கையாளர் சங்கம்;

தென்னிந்திய எழுத்தாளர் சங்கம்;

தென்னிந்திய நடிகர் சங்கம்;

தென்னிந்திய நாடக சங்கம்;

தென்னிந்திய சினிமாக்காரர் சங்கம்;

தென்னிந்திய சினிமாத் தொழில் நிபுணர்கள் சங்கம்;

தென்னிந்திய வர்த்தக ச[…]கம்;

தென்னிந்திய இன்சூரன்[…] ஊழியர் சங்கம்;

தென்னிந்திய பொறியிய[…] வல்லுநர் சங்கம்;

தென்னிந்திய நுண் கலை[…] பகுதியினர் சங்கம்;

இப்படி ஏராளமா[…] அமைப்புகள் தென்னிந்திய[…]வைத் தனியேப் பிரித்து ஏ[…] ஏற்பட்டுள்ளன? யாரு[…] வேண்டுமென்று செய்[…] கொள்வதல்ல, அவ்வாறுவட[…]கிலிருந்து பிரிந்து, ஒன்றுபட்[…] தனி அமைப்பாகத் தென்[…] இருக்கிறது!

நாம் "திராவிடம்' என்[…] அதற்கென்றுள்ள தனிப்பட்[…] சிறப்புப் பெயரால் சொல்[…]றோம். அதையே அவர்க[…] பொதுவாக, பிரித்துக்காட்டு[…] வகையில் "தென்னாடு[…]" என்று கூறுகிறார்கள்! பரவ[…]யில்லை, எப்பெயரிட்டாலும் ம[…]ரின் அழகும் மணமும் குறைய[…] தென்பதைப்போல, எப்பெ[…]ரில் குறிப்பிட்டாலும், திரா[…]விடம் எனக் குறிப்பிட்ட பகு[…] ஒரு தனிப்பட்ட பகுதி, நா[…] தனிப்பட்டவர்கள், நமது[…] பகுதியை நாம் கவனிக்கவேண்[…]டும் என்ற அக்கரை பிறந்து[…]ளது! உரிமை உணர்வு தோ[…]யுள்ளது!

நமது இலட்சியப்ப[…] சிறிது சிறிதாக உயர்ந்து[…] பரவி, எங்கும் நிறைநாதமா[…] ஆகிவிட்டது!

காலம் கனிந்து வருகிறது[…] நாம் காணும் கனவுகள் ந[…]வாகும் என்ற நம்பிக்கை மல[…]கிறது! நம்பிக்கையும், உணர்ச்[…]யும், நல்லெண்ணமும், உழை[…]பும், என்றும் வீண் போ[…]தில்லை!

வாழ்க, வாழ்க, வளமார் எம[…] திராவிடம்!

திரு. எஸ். இராமலிங்கம் மறைவு

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் மாமனாரும், டாக்டர் விசாலாட்சி அவர்களின் தந்தையாருமான திரு. எஸ். இராமலிங்கம் அவர்கள் 10-9-57 இரவு 8-45 மணிக்கு பூவிருந்தவல்லியில் இயற்கையெய்தினார் என்ற செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. எஸ். இராமலிங்கம் அவர்கள் சேலத்தில் பெருங்குடும்பத்தில் பிறந்து, சிறுவயதிலேயே எஞ்சினீரியங் படிப்பை முடித்து, சென்னை மாநிலத்தில் பல இடங்களில் எஞ்சினியர்வேலை பார்த்தார்.

அவர் நேர்மைக்கும், நாணயத்திற்கும், திறமைக்கும் பெயர் பெற்றவர்.

இறுதியாக 1943-ம் ஆண்டு வடஆற்காடு மாவட்டம் வேலூரில் முனிசிபல் எஞ்சினீயராக இருந்து ஓய்வு பெற்றார்.

இப்பொழுது அவருக்கு வயது 71 ஆகும்; அவர், மனைவி மாணிக்கத்தம்மாள் அவர்களையும், டாக்டர் விசாலாட்சி, ஞானசுந்தரி, நடராசன் ஆகிய மக்களையும், விட்டுப் பிரிந்து விட்டார். அவர் சென்ற 1½ ஆண்டுக்காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார்.

திரு. இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்களும், திரு. எம். எஸ். பிறைகபாணி எம். ஏ. அவர்களும் அன்னாருக்கு மருமக்களாவர்.

மன்றம்

ஞாயிறு 15—9—57 சென்னை

மொழிப்பறி

கேர் தலைமையில் அமைக்கப்பட்ட மொழிக் குழு
னர் தந்த அறிக்கை வெளியிடப்பட்டபின் இந்திப்
ரியர்கள் குதூகலமடைந்துள்ளனர். இந்தி வெறி வெளிப்
டையாகத் தலை தூக்கி, படமெடுத்தாடுகிறது. எவ்வளவு
ரைவில் இந்தி மொழியை அரசாங்கப் பொது மொழி
க்க முடியுமோ அவ்வளவு விரைவில் செய்து முடிக்க
வண்டுமெனத் துடிக்கின்றனர்.

இந்தியைப் பொது மொழியாக்குவதற்கான வேலைகளை
த்திய அரசாங்கம் மிக அமைதியாக-மிகச் சாமர்த்திய
ன முறையில் செய்து வருகிறது. படபடப்பைக் காட்
னல் காரியம் கெட்டுவிடும் என்ற நோக்கத்தில், டில்லி
திக்கம் மெதுவாக இந்தியை எல்லாவழிகளிலும் திணித்
டி இருக்கிறது. அரசாங்க ஊழியர்களைப் பொறுத்த
ரை, இந்தியை அவர்கள் கட்டாயமாகக் கற்றுக்கொள்
ம்படிச் செய்துள்ளது. அண்மையில் வெளியான அர
ங்க அறிக்கைப்படி, 20 ஆயிரம் அரசாங்க ஊழியர்கள்
ந்தியைக் கற்று வருகிறார்கள். 1958க்குள் 50 ஆயிரம்
ழியர்கள் இந்திக் கற்றுக் கொள்ளும்படிச் செய்யப்
வோர்களெனத் தெரிகிறது. இந்தி கற்றுக் கொடுப்பதற்
ன அமைப்புகள், இன்னும் இரண்டொரு திங்களில்
துரை, திருச்சி, வெலிங்கடன் போன்ற உள் நகரங்களி
ம் நிறுவப்படுமென அரசாங்கம் தெரிவிக்கிறது. இந்தி
யப் பரப்பும் இந்த முயற்சிகளனைத்தும் அரசாங்க ஆதர
ல்-அரசாங்கச் செலவில் நடைபெறுகின்றன. இந்தி
யப் பரப்பக் கோடிக்கணக்கில் அரசாங்கப் பணம் செல
கிறதென்றால், அது பந்த் வீட்டுப் பணமோ, தாண்டன்
ட்டுப் பணமோ அல்ல; மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட
ிப்பணம்-நாம் கொடுத்த பணத்தை எடுத்து உத்தரப்
ரதேச இந்தியை மட்டும் பரப்ப உபயோகப் படுத்தப்
கிறது.

இந்தி ஏகாதிபத்தியம் தன் வலிய கரங்களை நான்கு
க்குகளிலும் சுற்றிப் பிடிக்கக் கிளம்பியுள்ளது!

இந்தி வெறி கொடிய நாக்கை நீட்டி, நஞ்சை உமிழத்
தாடங்கியுள்ளது!

இந்திய துணைக்கண்டம் முழுவதையும் இந்தி ஆதிக்கத்
ன் கீழ் கொண்டுவரப் பாடுபடுகின்றனர்!

இந்தியாவை இந்தி மயமாக்கும் வேலை நடைபெறு
றது!

கட்டாய இந்தி வருகிறது, நமது வாழ்வையெல்லாம்
ட்டாயத்தினால் இந்தி மயமாக்கும் முயற்சி வருகிறது!
ந்தி மயங்கும் நேரத்தில், பின்னாலிருந்து தடிகொண்டு
க்கி மூர்ச்சையாகும்படிச் செய்து இருப்பதைக் கொள்
ளயடித்துச் செல்வதைப் போல, வறுமையாலும் வாட்டத்
ாலும் மக்கள் குழம்பியிருக்கிற நேரத்தில் மறைமுகமாக
பால் இலாகாவிலும் இரயில்வேநிலையத்திலும், அரசாங்க
ழியர்களிடையேயும் கட்டாயமாக இந்தியைப் புகுத்தி,
ந்தியல்லாத மற்ற மொழியினரின் உரிமைகளைப் பறிக்க
றப்பட்டுள்ளனர்!

கொள்ளையடிப்பவன் செய்வது வழிப்பறி! டில்லி
திக்கத்தினர் செய்வது மொழிப்பறி!

வழிப்பறி செய்பவன், மடியிலிருக்கும் பொருளை
டுத்துச் செல்கிறான்!

மொழிப்பறி செய்பவர்கள், நமது நாட்டின் கடைசிச்
சல்வத்தை-மொழி வளத்தைப் பறிக்கச் சூழ்ச்சி செய்
ன்றனர்!

"ஒரு நாட்டை அடிமையாக்க, அந்த நாட்டு மொழி வளத்தை அழித்தால் போதும்" என்று சொல்வார்கள். அதைப்போல, இந்திய துணைக்கண்டத்தில் இருக்கும் எல்லாப் பகுதிகளையும் டில்லி ஆதிக்கத்தின் கீழ் அடிமைப் படுத்த, இந்தியல்லாத மற்ற மொழிகளெல்லாம் அடிமைப் படுத்தப் படுகின்றன. இந்தி மொழிக்குப் பின் மற்ற மொழிகளை வைக்க முயல்கின்றனர்.

அரசியல் ஏகாதிபத்தியத்துக்கு உதவியாக மொழி ஏகாதிபத்தியம் அழைக்கப்படுகிறது!

இந்தி ஆதிக்கத்தை தென்னாட்டிலிருக்கும் நாம் மட்டும் எதிர்க்க வில்லை. இந்தி ஆதிக்கத்தால், இந்தி மொழியற்ற மற்ற எல்லா மொழிகளுக்கும் ஆபத்து மூண்டுள்ளது. இந்தியுடன் சிறிது கூடத் தொடர்பில்லாத தென்னாட்டு மொழிகளுக்கு இந்தியால் அதிகமான ஆபத்து ஏற்பட்டுள்ளது.

"மிகக் குறுகிய காலத்தில், விரைவாக" இந்தியைக் கொண்டு வருவது குறித்து பல பகுதியிலிருந்தும் கடுமையான எதிர்ப்பு வந்துள்ளது. வங்காளத்திலிருந்து, கல்வித் துறையில் ஈடுபாடுகொண்ட பேராசிரியர்களும் பெரியவர்களும் ஒன்று கூடி ஒரு நீண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளனர். ஆங்கிலத்தைக் கைவிடுவது கூடாது என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். அவர்கள் அறிக்கையில் மற்றொரு எச்சரிக்கையைத் தந்துள்ளார்கள். "அரசியல் ஒற்றுமைக்காக ஒரே மொழியைக் கொண்டு வர முயலுகிறார்கள். ஒரே மொழியைப் புகுத்தினால், எந்த அரசியல் ஒற்றுமை வேண்டுமென நினைக்கிறார்களோ அந்த அரசியல் ஒற்றுமை அதனால் சிதறடிக்கப்படும் என்பது நிச்சயம்!" இந்தி மீது வேறு எந்த வகையிலும் வெறுப்புக் கொள்ள காரணமில்லாத வங்கப் பேராசிரியர்கள் தந்த எச்சரிக்கையை இந்திய அரசாங்கம் கவனிக்கும் என எதிர்பார்க்கிறோம்.

இந்தியை முதன் மொழியாக்கும் முயற்சியை 1990 வரை ஒத்திப்போடும்படி, பாராளுமன்றத்திலிருக்கும் தென்னாட்டுக் காங்கிரசு உறுப்பினர்கள் ஒரு வேண்டுகோளைப் பிரதம மந்திரியிடம் தரப்போவதாகத் தெரிகிறது.

நம்மைப் பொறுத்தவரை, ஆங்கிலம் எவ்வளவு அந்நியமொழியோ, அந்த அளவுக்கு இந்தியும் அந்நியமொழி! ஆனால் ஆங்கில மொழியினால் கிடைத்து வருகிற-கிடைக்கக் கூடிய பலன்கள் இந்தியினால் கிடைக்காது என்பது நிச்சயம். இதை வெறிபிடித்த இந்திப் பிரியர் கூட மறுக்க முடியாது. உலகத் தொடர்பு கொள்ள, விஞ்ஞான அறிவைப் பெற, ஆங்கிலம் இன்றியமையாதது. எந்த வகையிலேயோ கிடைத்துள்ள ஒரு நல்ல வசதியை இழப்பதில் பொருளில்லை. ஆகத் தமிழகத்துக்கு முதலாவதாகத் தமிழும், அடுத்தபடி ஆங்கிலமும் போதுமானது. இதற்கிடையில் இந்தியென்ற தொந்தரவுத் தேவையில்லை!

எவர் என்ன சொன்னாலும், இந்தியைக் கொண்டு வந்தே தீருவோம் என அரசாங்கம் வீண் முறுக்குடன் இருந்தால், அதனால் பெரும் கொந்தளிப்புகள் உண்டாவது உறுதி. டில்லி அதிபர்கள் இதில் கண்மூடியாக இருந்துவிட முடியாது. மொழிக் கிளர்ச்சி-மொழிச் சண்டை அவர்களுடைய தலை நகரிலேயே நடைபெறுகிறது. டில்லிப் பட்டணத்தில் இந்திவெறியர்களுக்கும் பஞ்சாப் மொழியினருக்கு மிடையில் நடந்த மோதுதல், மொழியுணர்வு எவ்வளவு ஆழப்பதிந்துள்ளது என்பதைக் காட்டும். டில்லியில் இருக்கிற பஞ்சாபியே டில்லியில் இருக்கிற இந்தி ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் நாம் எப்படி டில்லியிலிருக்கிற இந்தி ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியும்!

தோழர் சம்பத் அவர்கள் மக்கள் சபையில் முதல் தடவையாகப் பேசும் பொழுதே "பயத்தினாலோ நயத்தினாலோ, உலகிலுள்ள எந்தச் சக்தியின் துணைக்கொண்டும் இந்தி ஏகாதிபத்தியத்தின்கீழ் தமிழகத்தை அடக்கிவிட முடியாது" என்று எச்சரித்தார். அந்த எச்சரிக்கையை மீண்டும் நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

இந்தி வெறி தலை தூக்குகிறது, இந்தி ஆதிக்கம் படையெடுத்து வருகிறது. அதைத் தடுத்து நிறுத்திட தாயகத்தைக் காத்திட, எதிர்ப்பு அணி தேவைப்படுகிறது. அந்த வகையில் திருவண்ணாமலையில் வரும் 21ந் தேதியன்று "இந்தி எதிர்ப்பு மாநாடு" கூடுகிறது. மொழிப் பற்றுடையோர், நமது உரிமைகள் காக்கப்பட வேண்டும் என விழிப்புணர்ச்சியுடையோர், திருவண்ணாமலை மாநாட்டுக்கு வருவார்களாக!

ஐந்தாண்டுத் திட்டம்!

——(0)——

திட்டத்தை வெட்ட திட்ட "பிரமாக்கள்" யோசனை.

——(0)——

நாட்டின் பொருளாதார நிலையை—வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டது.

இந்திய அரசாங்கத்தினர் போட்ட முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்து விட்டது. முதல் திட்டம் முடிவடைந்ததும், நாட்டின் பொருளாதார நிலை எந்த அளவு உயர்ந்துவிட்டதுஎன்பதுபற்றி பல புள்ளிவிவரங்களைத் தந்தது. சராசரி வருமானம் ஆறில் ஒருபங்கு உயர்ந்து விட்டதாக அறிவித்தார்கள். திட்டத்தில் ஏற்பட்ட பலன் என மகிழ்ந்தார்கள். ஆனால் வருமானம் எந்த அளவில் உயர்ந்ததோ, அதைவிட வேகமான அளவில் விலைவாசிகள் உயர்ந்தன என்பதை அவர்கள் முதலில் கவனிக்கவில்லை. வருமானம் சிறிது உயர்ந்த போதிலும் விலைவாசிகள் அதைவிட அதிகமாக உயர்ந்துவிட்ட காரணத்தால் முன்பிருந்த நிலைமை நல்லது என்று தோன்றியது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பித்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஐந்து ஆண்டுகளில் செய்யப்பட்டதை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஒரே ஆண்டின்கீழ் செய்து விட்டார்கள். அதுதான் விலைவாசிகள் உயர்வு! விலைவாசிகள் உயர்வு, மற்றவைகளைத் தாக்குவதற்குமுன் தன்னைச் சிருட்டித்த திட்டத்தையே தாக்க ஆரம்பித்துவிட்டது!

ஐந்தாண்டுத் திட்டத்தினால் வேறு எந்தவகையிலும் வளர்ச்சி தெரியாவிட்டாலும், திட்டத்துக்கு வளர்ச்சி இருக்கிறது! திட்டத்தினால் வளர்ச்சி உண்டாக்கப் படுவதுபோய், திட்டத்துக்கு வளர்ச்சி உண்டானது! 4800 கோடி ரூபாயில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து" இப்பொழுது 5500 கோடி ரூபாய் அளவை அடைந்துள்ளது! ஒன்னரையாண்டு முடிந்த நிலையில் திட்டச் செலவு 700 கோடி ரூபாய் உயர்ந்துவிட்டது! இன்னும் பாக்கியிருக்கும் மூன்றரை ஆண்டுகளில் எந்த அளவு வளர்ச்சியடையுமோ சொல்ல முடியாது!

4800 கோடி ரூபாய்க்கே என்ன செய்வது என்று மத்திய அரசாங்கம் விழித்துக் கோண்டு இருக்கும்பொழுது, மேற்கொண்டு 700 கோடி ரூபாய் தேடவேண்டிய நிலை பிறந்தது. திட்டத்தின் ஆரம்ப காலத்தில், திட்டத்தின் அளவையும் இவர்கள் சேர்க்கக் கூடிய நிதியின் அளவையும் பணப் பெருக்கத்தால் ஏற்படக் கூடிய பாதகங்களையும் சீர் தூக்கிப் பார்த்த சிலர், திட்டத்தின் காலத்தைக் கூட்டுவது, அல்லது திட்டத்தின் அளவைக் குறைப்பது என்று யோசனை சொன்னார்கள். இந்த இரண்டு முறைகள் சரியா தவறா என்பதைவிட, திட்டத்திற்கு இவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு நிதி கிடைக்கவில்லையென்றால் அந்த இரண்டு முறைகளைத் தவிர வேறு வழி கிடையாது என்று ஏற்பட்டது.

திட்டத்தை அப்படியே நிறைவேற்றியாகவேண்டும் என்றுதான் அரசாங்கமும் காங்கிரசுத் தலைவரும் பேசினார்கள், விரும்பினார்கள். ஆனால் இவர்களது விருப்பத்தை விடப் பொருளாதார நெருக்கடி பெரிய சக்தியாக இருந்தது, ஆகக் கடைசியாகத் திட்டத்தைக் குறைப்பது என்ற நிலைக்கு நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரு[ம்] திட்டமந்திரி குல்சாரிலால் ந[ந்]தாவும் வந்துள்ளார்கள்.

4800 கோடி ரூபாய்க்[கு] போட்ட திட்டங்களின் செல[வு] 5500 கோடி ரூபாக்குச் செ[ல்கி]றது. இப்படி அதைச் சுரு[க்]கிக் குறைத்து, பழைய 480[0] கோடி எல்லைக்குள் கொண்[டு] வர நிதி மந்திரி முயற்சிக்கிற[ார்].

எப்படிக் குறைப்பது?

அதில் இன்னும் தெளி[வு] ஏற்படவில்லை.

"அடிப்படைத் திட்ட[ங்]களை" நிறைவேற்றப்போ[வ]தாக டி. டி. கே கூறுகிற[ார்]. அடிப்படைத் திட்டங்கள் எ[ன்]பதற்கு அவர் தரும் விளக்க[ம்] "நிலக்கரி, எஃகு, மின்சார[ம்] போக்குவரத்து" ஆகியவை[.] ஆக இந்தத் திட்டங்களை ம[ட்]டும் வைத்துக்கொண்டு, மற்[ற] திட்டங்களை ஒத்திப் போ[ட]லாம் என்கிறார் அவர்!

இதில் ஒரு பெரிய குழப்ப[]நிலை திண்டாட்டம் உண்டாக[ப்] போகிறது.

இப்பொழுதே மாநிலங்க[ள்] தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள[] திட்டங்கள் போதாதென்[று] கூக்குரலிட்டபடி இருக்கின்[]றன. இந்த நிலையில் கொடு[க்கப்பட்]துள்ள குறைந்த திட்டங்களை[]யும் வெட்டுவதென்றால் மாநிலங்களின் கோபங்களு[க்]கும் கொந்தளிப்புகளுக்கும் ஆளாக நேரிடும்.

திட்டத்தைக் குறைக்[க] வேண்டிய நிலை பிறக்கும் என்[ற] கருத்து உலவ ஆரம்பித்[த]துமே, மைசூர் மாநில முதல[]மைச்சர் திட்டவட்டமாக அறி[]வித்துவிட்டார் "மைசூ[ர்] மாநிலத்தின் எந்த திட்டத்தை[]யும் குறைக்க முடியாது" என்று!

இதைப்போலவே மற்[ற] தென்னாட்டு மாநிலங்களு[ம்] குறைத்துக்கொள்ள இயலாத[] கட்டத்தில் இருக்கின்றன[.] அதே மூச்சில் மற்ற மாநிலங்க[ளு]ளும் தங்கள் திட்டங்களை[க்] குறைத்துக்கொள்ள முன்வ[ர] மாட்டார்கள்.

குறைக்க வேண்டிய 700 கோடி ரூபாயை எங்கு குறைப்[]பது என்ற பெரும் தல[ை]வேதனை அரசாங்கத்துக்கு[க்] காத்திருக்கிறது.

திட்டம் திண்டாட்டமாகி[,] குழப்பமாகி, கோபமாகி, கொ[ந்]தளிப்பாகி, கிளர்ச்சி நிலை[வ]ரைப் போகக்கூடும்.

வீட்டு வசதித் திட்டம்

——(0)——

வடக்கும் தெற்கும்

——(0)——

குறைந்த வருமாணம் உடையவர்கள் வீடுகட்டுவதற்காக மனையிடங்களை வாங்கித்தர இந்திய அரசாங்கம் திட்டம் தீட்டியது. அதன்படி காலி மனையிடங்கள் வாங்கப்பட்டு, சிறிது பண்படுத்தி வீடுகட்டுவதற்கு இலாயக்குடையனவாகச் செய்யப்படும். இந்தத் திட்டத்தின்கீழ் 1957 ஆகஸ்ட் 31ந்தேதிவரை, பல்வேறு மாநிலங்களுக்குத் தரப்பட்டுள்ள கடன்தொகைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

உத்தர பிரதேசம்	47 லட்ச ரூபாய்.
டில்லி	25 லட்ச ரூபாய்.
மத்திய பிரதேசம்	23 லட்ச ரூபாய்.
பம்பாய்	23 லட்ச ரூபாய்.
பீகார்	16 லட்ச ரூபாய்.
சென்னை	4 லட்சத்து 24 ஆயிரம்.
ஆந்திரம்	5 லட்சத்து 55 ஆயிரம்.

ஆந்திரத்திலும் தமிழ் நாட்டிலும், குறைந்த வருமானம் உடையவர்கள் நல்ல வசதியான வீடுகளில் குடியிருக்கிறார்கள் எனக் கூறமுடியாது. வடநாட்டைவிடத் தென்னாட்டில்தான் வீடற்றவர்கள் எண்ணிக்கை அதிகம். வாழ்க்கைத்தரக் குறைவால், சுகாதாரமற்ற சூழ்நிலைகளில் வதைபடுகிறவர்கள் இங்கு ஏராளம். இருந்தாலும் உத்தரப் பிரதேசத்துக்கு 47 லட்சம், டில்லிக்கு 25 லட்சம் என ஒதுக்கப்படும்பொழுது தென்னாட்டு மாநிலங்களுக்கு 4 லட்சம், 5 லட்சம் என்று தரப்படுகின்றன.

டில்லி தேவதையின் கடாட்சம் தென்னாட்டுக்குக் கிடையாதே!

ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மோசம்!

—(0)—

டாடா கம்பனிக்கு இந்திய அரசாங்கம் தந்த பணம்!

—(0)—

இரயில் என்ஜின் வாங்குவதில் ஊழல்கள்!

—(0)—

"சமதர்மத் திட்டங்களைக்" காங்கிரசுக் கட்சி போடுகிறது!

முதலாளிகளுக்குப் பக்கபலமாகக் காங்கிரசு அரசாங்கம் இருக்கிறது!

பொதுக் கூட்டங்களில், தேர்தல் காலங்களில், மக்களிடமிருக்கும் ஓட்டுகளைத் தட்டிப் பெருவதற்கு காங்கிரசின் "சமதர்மத் தீர்மானம்" பயன் பட்டது!

தேர்தல் காலத்தில் கூட, ஒரு புறம் "சமதர்ம பாணியைப்" பற்றி காங்கிரசு மக்களிடம் பேசியபோதிலும், கடைசியாக ஓட்டு வாங்க முதலாளிகள் கொடுத்த பணம்தான் உதவியது! டாடா போன்ற பெரும் முதலாளிகள் தந்த பணத்தை வைத்துக்கொண்டுதான் தேர்தல் "வேலைகளை" காங்கிரசு நடத்தியது, அரசாங்கத்தைக் கைப்பற்றியது!

வெளிப்படையாக, கணக்கில் கண்டுள்ளபடி, டாடா கம்பனி மட்டும் காங்கிரசின் தேர்தல் நிதிக்கு 10 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய்கள் கொடுத்தது!

காங்கிரசு "சமதர்மம்" பேசியது, ஆனால் "சமதர்மம்" பேசிய காங்கிரசுக்கு முதலாளிகள் பண உதவி செய்தார்கள்!

உற்பத்தி முறைகள் பொதுவாக ஆக்கப்பட வேண்டும், உற்பத்தி முறைக்கு அடிப்படையாக மக்களின் நலம் இருக்கவேண்டும். இது சமதர்மத் திட்டத்துக்கு முக்கிய பண்புகள்!

உற்பத்தி முறைகள் தனிப்பட்டவர்கள் பொறுப்பில் இருக்கும். உற்பத்தி முறை, அதில் கிடைக்கக் கூடிய லாபத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இவ்வாறு லாப வேட்டையின் நோக்கத்தில் தொழில்களை தனிப்பட்டவர்கள் நடத்துவது முதலாளித்துவத்தின் முக்கிய பண்பு!

இவ்வாறு, சமதர்மமும் முதலாளித்துவ முறையும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு இருக்கின்றன! ஆடும் புலியும்போல, இரண்டும் ஒன்றையொன்று பகையுணர்ச்சியுடன் பார்க்கின்றன.

இந்தியாவில் காங்கிரசு "சமதர்மம்" பேசுகிறது; ஆனால் முதலாளிகள்-சாதாரண முதலாளியிலிருந்து பல கோடிகளுக்கு அதிபதிகளாக விளங்கும் கொழுத்த முதலாளிவரை, எல்லா முதலாளிகளும் கட்டுப்பாடாகக் காங்கிரசை ஆதரிக்கின்றனர்.

காங்கிரசை முதலாளிகள் ஏமாற்றப் பார்க்கிறார்களா? அல்லது முதலாளிகளைக் காங்கிரசு ஏமாற்றுகிறதா?

புலியும் ஆடும்போல, முதலாளிகளும் காங்கிரசும் நிற்கின்றன! இன்னும் சரியாகச் சொல்லப்போனால் புலியும் மாடும் போல நிற்கின்றன! மாடுதான் காங்கிரசுக்குத் தேர்தல் அடையாளமாக இருந்தது! காங்கிரசு மாட்டுக்கு உதவியாக முதலாளிப் புலிகள் இருக்கின்றன!

இதில் யார் ஏமாறப்போகிறது? மாட்டைப் புலி அடிக்குமா? புலியை ஏமாற்றி, "சமதர்மம்" என்ற சமமான புல்வெளிக்கு மாடு வந்து விடுமா?

இத்தகைய கேள்விகள் எழக்கூடும். உண்மையில் காங்கிரசும் ஏமாறப் போவதில்லை, முதலாளிகளும் ஏமாறப் போவதில்லை. மத்தியிலிருக்கிற பொதுமக்கள்தாம் ஏமாறுகிறார்கள்!

காங்கிரசு பேசுகிற சமதர்மம் முதலாளிகளை ஏமாற்றவில்லை. அது எத்தகைய சமதர்மம் என்பது முதலாளிகளுக்குத் தெரியும். ஆனால் அந்தச் சமதர்மத்தைக் கேட்டு நம்புகிறபொதுமக்கள் தாம் ஏமாந்து விடுகின்றனர்.

மாடும் ஏமாறப் போவதில்லை, புலியும் ஏமாறப்போவதில்லை! வேடிக்கை பார்க்கிறவன்தான் ஏமாறப் போகிறான். ஏனென்றால், அங்கு இருப்பது மாடும் புலியும் அல்ல; புலியும் புலியும் தான்! இரண்டும் புலிகள் தாம்! ஒன்று மாட்டுத் தோல் போர்த்த புலி, இன்னொன்று அப்படி இல்லாமல் உண்மையான புலியாக இருப்பது! இரண்டும் ஒன்று கூடி, மனிதனை அடிக்கக் காத்துக் கொண்டிருக்கின்றன!

காங்கிரசு சமதர்மம் பேசுவது, புலி மாட்டுத் தோலைப் போர்த்தியிருப்பது போலிருக்கிறது! மாட்டுத்தோலை மட்டும் பார்த்தால் புலியின் சுபாவம் தெரியாது, சமதர்மப் போர்வையைமட்டும் கவனித்தால் காங்கிரசின் உண்மை உருவம் தெரியாது! உண்மையான புலி மாட்டுத்தோல் போர்த்த புலிக்கு உதவியாக வருவதுபோல, உண்மையான முதலாளிகள் காங்கிரசு முதலாளிகளுக்கு உதவியாக வருகிறார்கள்!

டாடா பிர்லாக்கள் பொருளாதார முதலாளிகள்; காங்கிரசு ஒரு அரசியல் முதலாளி. இரண்டு முதலாளிகளும் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொள்கின்றனர்!

டாடா இரும்புக் கம்பனி காங்கிரசின் தேர்தல் நிதிக்கு 10 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய்கள் தந்தது! இவ்வாறு தனிப்பட்ட கம்பனிகள் அரசியல் கட்சிக்குப் பணம் தருவது கூடாது எனக் காங்கிரசை ஆதரிக்கும் ஒருவரே எழுந்து டாடா இரும்புக் கம்பனி பங்குதாரர்கள்கூட்டத்தில் சொல்லியிருக்கிறார். அதற்குப் பதில் சொல்லும்பொழுது, டாடாகம்பனி அதிபர் ஜே. ஆர். டி. டாடா அவர்கள், "காங்கிரசுக்குப் பணம் கொடுப்பது, கம்பனிக்குத்தான் நல்லது." என்று சொன்னார்.

காங்கிரசுக்குப் பத்து லட்சம் கொடுப்பதால், தேர்தலில் காங்கிரசு வெற்றிபெற முடியும். அதனால் முதலாளிக்கு என்ன இலாபம் என்று கேட்கத் தோன்றும்.

காங்கிரசு பதவிக்கு வருவதால் முதலாளிகளுக்கு இலாபம் இருக்கிறது!

காங்கிரசு பதவிக்கு வருவதால், டாடாக்களுக்கு இலாபம் இருக்கிறது!

டாடா முதலாளி பத்து லட்ச ரூபாய் நிதியாகத் தருகிறார். அதைப்போல பல மடங்கு அதிகமான பணத்தை வேறொருவகையில் அரசாங்கத்திடமிருந்து "இலாபமாக" சம்பாதித்து விடுகிறார்!

டாடா பத்துலட்சம் ரூபாய் தருகிறாரென்றால், சும்மா தரவில்லை, அவருடைய ஆதிக்கத்தில் இருக்கும் மற்றொரு கம்பனிக்கு அரசாங்கம் 1 கோடி 14 லட்ச ரூபாய்களைக் கொட்டித் தந்துள்ளது!

எந்தக் கணக்கிலும்சேராமல், முறையில்லாத வகையில் டாடா என்ஜின் உற்பத்திசாலைக்கு இந்திய அரசாங்கம் 1கோடி 14 லட்சம் ரூபாய்களைத் தந்துள்ளது!

இந்த விவரம் அண்மையில் மக்கள்சபையில் நடந்த விவாதத்தில் வெளியாகியுள்ளது. அதில் மிகத் திடுக்கிடத்தக்க பல உண்மைகள் தெரிய வந்துள்ளன.

இந்திய இரயில்வேயுக்கு வேண்டிய இரயில் என்ஜின்களை டாடா என்ஜின் தொழிற்சாலையிடமிருந்து வாங்க, இந்திய அரசாங்கம் முடிவு செய்தனர்! டாடா கம்பனியிடமிருந்து என்ஜின் வாங்குவதென்றால், அதனால் ஏதாவது லாபமா என்றால் கிடையாது. வெளிநாடுகளிலிருந்து என்ஜின் வரவழைப்பதைவிட—அதாவது இங்கிலாந்து, ஜப்பான், செக்கோசுலேவேகியா ஆகிய நாடுகளில் செய்யச்சொல்லி, அங்கிருந்து கப்பலில் ஏற்றி, இந்தியாவுக்குள் கொண்டு வர ஆகும் செலவு எல்லாவற்றையும் சேர்த்து ஆகிற விலையைவிட, டாடா கம்பனியிடம் வாங்குகிற என்ஜின்விலை அதிகமாக இருக்கிறது. அப்படி இருந்தாலும் பரவாயில்லை, வெளிநாட்டு என்ஜின்கள் வேண்டாம், உள்நாட்டு என்ஜின் உற்பத்திக்கு ஆதரவு தரவேண்டும் என்ற முறையில் அவ்வாறு செய்தார்கள் என்றால், அப்படியும் கூறமுடியாது. உள்நாட்டில் ஆஜ்மீரில் இருந்த தொழிற்சாலையில டாடா கம்பனியைவிடக் குறைந்த செலவில் என்ஜின்களை உருக்கித் தந்தார்கள். ஆனால் அதற்கு ஆதரவற்ற நிலையில், 1950ல் அந்த தொழிற்சாலை மூடப்பட்டுவிட்டதாம்! இருக்கிற நல்ல தொழிற்சாலையை மூடச்செய்து, புதிதாக ஒரு தொழிற்சாலைக்கு—டாடா ஆரம்பித்த தொழிற்சாலைக்கு அரசாங்கம் ஆதரவு தந்தது!

டாடா கம்பனி தயாரித்த என்ஜின் விலையை விடக் குறைந்த விலைக்கு, அரசாங்கத்தின் சொந்தக் கம்பனியாக உள்ள சித்தரஞ்சன் தொழிற்சாலையில் தயாரான என்ஜின் இருந்தது!

வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய என்ஜினைவிட டாடா கம்பனி என்ஜின் அதிகவிலை; உள்நாட்டில் சித்தரஞ்சனில் தயாரான என்ஜினைவிட டாடா கம்பனி என்ஜின் அதிகவிலை; இருந்தாலும் டாடா கம்பனியிடமிருந்து என்ஜின்கள் வாங்குவதென தீர்மானித்து அதற்கான நீண்டகால ஒப்பந்தங்களையும் எழுதிக் கொண்டது!

ஒப்பந்தம் எழுதப்பட்டது 1947 ஆகஸ்டு 20ந் தேதி! அந்த ஆண்டு ஆகஸ்டு 15ந் தேதியில்தான் இந்தியா விடுதலை நாடானது! சுதந்தர சாசனத்தைத் தீட்டியதற்கு ஐந்து நாட்களுக்குள், டாடா கம்பனியுடன் ஒரு மோசமான அடிமைச் சாசனத்தை இந்திய அரசாங்கம் தீட்டிக்கொண்டது!

இந்திய அரசாங்கம் டாடா கம்பனிக்கு எழுதிக்கொடுத்த ஒப்பந்தம், ஒரு அடிமை தன் ஆண்டைக்கு எழுதித்தரும் அடிமைச் சீட்டைப்போலத்தானிருக்கிறது! சட்ட விவரம் தெரியாத ஒரு சாதாரண ஆள் கூட எழுதித்தர மாட்டான். அந்த அளவு தனக்குப் பாதகமான விதிகளை உள்ளடக்கிய ஒப்பந்தத்தை

(9-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

பால்கனின் மகன்

கார்சிகா தீவு பிரான்சுக்குத் தெற்கில் மத்திய தரைக் கடலில் இருக்கிறது. குன்றுகளும் காடுகளும், எரிந்து தீய்ந்த புதர்களும் நிறைந்த அந்தத் தீவு, புதிதாக வருபவர்களுக்கு ஒருவகை மலைப்பையும் அத்துடன் ஒருவகைக் கவர்ச்சியையும் தரும். அந்த நாட்டைப் போலவே அந்த நாட்டு மக்களின் குணங்களும் இருந்தன. கரடு முரடாக அதே சமயத்தில் களங்கமற்றதாக இருந்தன. இந்தப் பண்புகளுக்கு ஒத்து மத்தே பால்கன் என்பவனும் இருந்தான்.

மத்தே பால்கன் பிரபுக்கள் பரம்பரையைச் சேர்ந்தவனில்லையென்றாலும், ஒரு பிரபுவைப்போல உல்லாசத்துடனும் பெருமையுடனும் வாழ்ந்தான். அவனுக்குச் செம்மறியாட்டுக் கிடைகள் பல இருந்தன. அவைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அவனும் அவனுடைய குடும்பமும் கவலையற்று இருந்தனர், மத்தே பால்கன் துப்பாக்கியால் குறி பார்த்துச் சுடுவதில் பெரிய நிபுணன். அவன்தோளில் ஒரு துப்பாக்கி எப்பொழுதும் தொங்கிக் கொண்டே இருக்கும். அவன் குறிவைத்துச் சுடும் திறமையைப் பற்றி கார்சிகா தீவு பூராவும் கதைகள் பல சொல்வார்கள். பறக்கிற பறவையைச் சுட அவன் ஒரு குண்டுக்கு மேல் சுடுவதில்லையாம். நூறு அடிக்கு அப்பால் எரிந்து கொண்டிருக்கிற மெழுகு வர்த்தியைப் பார்த்து அவன் குறி வைத்துச் சுட்டு, மெழுகு வர்த்தி விழாமல் அதன் நெருப்பு மட்டும் அணையும்படிச் செய்து விடுவானாம்! பகலில் மட்டுமல்ல, இருட்டில் கூட, மெழுகுவர்த்தியைப் பார்த்து சுட்டு நெருப்பை முதலில் அணைத்து விட்டு, பிறகு மெழுகுவர்த்தியை இருட்டில் உத்தேசமாகச் சுட்டு விடுவானாம். துப்பாக்கியில், மத்தே பால்கனை எதிர்நிற்க யாராலும் முடியாது. துப்பாக்கியை எதிரி தொடுவதற்குள், அவன் கை சுழன்று எதிரியின் துப்பாக்கியைக் கீழே தட்டி விடும்.

மத்தே பால்கன் எதிரிகளுக்கு எவ்வளவு ஆபத்தாக இருந்தானோ, அவ்வளவு நேசத்துடன் நண்பர்களிடம் நடந்து கொண்டான். தன்னை நம்பி வந்தவர்களுக்கு உதவுவதிலும் பாதுகாப்புத் தருவதிலும் அவன் யாருக்கும் சளைத்தவனல்ல. முரட்டு உருவத்தின்பின் இரக்கம் இருந்தது. இந்தக் கதையின்போது அவனுக்குவயது ஐம்பதுஇருக்கும். அவனுடையமனைவியின்பெயர் கியுசப்பா. அவனுக்கு மூன்று பெண்களும் ஒரு பையனும் பிறந்தார்கள். பெண்கள் திருமணமாகி கணவன் வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். பையன்மட்டும் தாய்தந்தையருடன் இருந்தான். அவனுக்கு வயது பத்து இருக்கும். அவன் பெயர் பார்த்துனத்தோ! ஒரே மகனானதால் பால்கனும் கியுசப்பாவும் மிகச் சீருடன் வளர்த்து வந்தார்கள்.

ஒருநாள் காலை பால்கனும், அவன் மனைவியும் காட்டில் மேய்ந்துகொண்டிருக்கும் ஆடுகளைப் பார்க்கச் சென்றார்கள். பார்த்துனத்தோவும் உடன் செல்லப் புறப்பட்டான். நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டியிருப்பதால், அவனை விட்டுச்சென்றார்கள். மேலும் வீட்டிலும் யாராவது இருக்க வேண்டும், ஆதலால் சிறுவன் எவ்வளவோ கேட்டும் பால்கன் அவனை வீட்டில் இருக்கச் சொல்லிச் சென்றான்.

தனியாக விடப்பட்ட பார்த்துனத்தோ வைக்கோற்போருக்கருகில் விளையாடிக் கொண்டிருந்தான். சிறிது நேரங் கழித்து, தூரத்தில் துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்டது. பையன் எழுந்து, புதர் வெளியைப் பார்த்தான், இன்னும் நாலைந்து வெடிச் சத்தங்கள் கேட்டன. கூர்ந்து பார்க்கும்பொழுது, புதர் வெளியை விட்டு ஒருவன் மிகச் சிரமத்துடன் இந்த வீட்டை நோக்கி ஓடிவருவது தெரிந்தது. கடைசியாக, ஒருவன் கையில் துப்பாக்கியுடன் தள்ளாடி வந்து பால்கனின் வீட்டு வாசற்படியருகே விழுந்தான்.

அவன் அரசாங்கபோர்வீரர்களிடமிருந்து தப்பி ஓடிவருகின்றான். குன்றுகளிடை மறைந்து மறைந்து போராடி கடைசியாக இங்குவந்துள்ளான். அவன் துடையில் ஒரு துப்பாக்கி குண்டு பாய்ந்துவிட்டது. அதனால் மேற்கொண்டு ஓடமுடியவில்லை.

"நீதான் மத்தே பால்கனின் மகனா?" என்று அவன் கேட்டான்.

சிறுவன் தலையசைத்தான்.

"என் பெயர் கியானத்தோ. என்னைப் பிடிக்க வீரர்கள் வருகிறார்கள். இனிமேல் என்னால் ஓடமுடியாது. எங்கேயாவது ஒளிந்துகொள்ள இடந்தா!"

"உன்னை ஒளியவைத்தால், என் அப்பா ஏதாவது சொல்வாரே!"

"நம்பி வந்தவர்களுக்கு உன் அப்பா அடைக்கலம் நிச்சயம் தருவார். என்னை ஒளிய வைத்ததற்காக அவர் கோபிக்கமாட்டார்."

"எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?"

"சீக்கிரமாக ஒளிய வை! அவர்கள் வந்துவிடப்போகிறார்கள்?"

"அப்பா வந்துவிடட்டும்."

"ஐயோ! உன் அப்பா வருவதற்குள் அவர்கள் வந்துவிடுவார்கள்! என்னை ஒளிய வைக்கிறாயா, இல்லை உன்னைக் கொன்றுவிடட்டுமா?"

சிறுவன் அந்த மிரட்டலுக்குப் பணியவில்லை. "உன்னுடைய துப்பாக்கி காலியாக இருக்கிறது. வெடிகள் தீர்ந்துவிட்டன."

"இந்தக் கத்தியால் உன்னைக் குத்த முடியும்."

"என்னைப் பிடிக்க உன்னால் முடியாது"

கியானத்தோவின் நிலைமையை சிறுவன் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறான்.

"பால்கனுடைய மகனல்ல நீ! என்னை இந்த வீட்டருகே வீரர்கள் பிடித்தால், அது உன் வீட்டாருக்குத்தான் அவமானம்!"

சிறுவன் யோசித்தான், "நான் உன்னை ஒளியவைத்தால், எனக்கு நீ என்ன தருவாய்!" என்று கேட்டான்.

கியானத்தோ தன் மடியில் தடவிப் பார்த்தான். அதில் ஐந்து பிராங் காசு இருந்தது. அதை எடுத்து நீட்டினான், பையன் அந்த வெள்ளிக் காசை ஆவலுடன் வாங்கினான்.

"இங்கே ஒளிந்துகொள்!" பையன் வைக்கோற்போரில் ஒரு இடத்தில் பறித்துவிட்டான். கியானத்தோ உள்ளே நேராய் படுத்துக்கொண்டான். எடுத்த வைக்கோலை மீண்டும் மேலே போட்டுமூடி, முன்பிருந்தாற்போல வைத்தான். வைக்கோற்போர் கலைந்தது தெரியாதபடி இருக்க, கீழே இருந்த ஒரு பூனையையும் அதன் குட்டிகளையும் எடுத்து அதன் மேலே பையன் வைத்துவிட்டான். படியருகில் இருந்த இரத்தத்தையும் மண்ணால் மூடிவிட்டு, சிறுவன் விளையாட்டில் ஈடுபட்டான்.

சிறிது நேரங்கழித்து ஆறு வீரர்களும் அவர்களுக்குத்தலைவனான காம்பா என்பவனும் வந்தார்கள். பால்கனுக்கு மிகத் தூர உறவுடையவன் காம்பா! பால்கன் சுயேச்சையாக இருந்தபொழுது, காம்பா அரசாங்க ஊழியனாகச் சேர்ந்துவிட்டான். இப்பொழுது அரசாங்க எதிரிகளைப்பிடிக்க வந்திருக்கிறான்.

உறவுமுறை கொண்டாடி "என்னடா! நன்றாக வளர்ந்துவிட்டாயே! இந்தப் பக்கம் ஒரு ஆள் ஓடி வந்ததைப் பார்த்தாயா?" என்று காம்பா கேட்டான்.

பார்த்துனத்தோ விளையாட்டை விட்டு எழுந்திருக்காமல், "இன்னும் உங்கள் உயரம் வளரவில்லையே, மாமா!" என்றான்.

"உயரம் இருக்கட்டும், மஞ்சள் சட்டையணிந்து, சிகப்புக் கோட்டுடன், ஒருவன் இந்தப் பக்கம் வந்ததைப் பார்த்தாயா?"

"மஞ்சள் சட்டையணிந்து சிகப்புக் கோட்டுடன் இந்தப் பக்கம் ஒருவன் வந்தானா என்று கேட்கிறீர்கள்!"

"நான் சொன்னதையே திருப்பிச் சொல்ல வேண்டாம்! யாராவது சற்று முன் வந்தார்களா?"

"அரைமணி நேரத்துக்கு முன் பாதிரி இந்தப் பக்கம் போனார் என்னைப் பார்த்து அப்பா எங்கே என்று கேட்டார். நான் வந்து......"

"வந்து, போய் எல்லாமிருக்கட்டும்! எந்தப் பக்கம் அவன் ஓடினான்? இந்தப்பக்கம்தான் அவன் வந்திருக்க வேண்டும்." காம்பா அவசரப்பட்டான்.

சிறுவன் மிக அமைதியுடன் "யார் அவனைப் பார்த்திருப்பார்கள்?" என்று கேட்டுக்கொண்டான்.

"நீ பார்த்திருக்க வேண்டும்."

"தூங்கிக்கொண்டே பார்க்கமுடியுமென்றால், நான் பார்த்திருக்க வேண்டும்."

பிராஸ்பமேரிமா '1803—1870' என்ற பிரெஞ்சுக் கதாசிரியர் எழுதிய சிறுகதை ஒன்றின் மொழி பெயர்ப்பு இது. பிரெஞ்சு இலக்கியத்தில் பல சிறு கதைகளுக்கும் நாவல்களுக்கும் அவர் ஆசிரியராக விளங்குகிறார். புகழ்பெற்ற "கார்மன்" என்ற ஜிப்சிப் பெண்ணைப் பற்றிய கதை முதலில் அவரால் எழுதப்பட்டதாகும். சிறுகதைகளில் அவருடைய கதை சொல்லும் திறமை நன்கு வெளிப்படுகிறது.

சிறுவன் சாமர்த்தியமாகப் பேசுவது காம்பாவுக்குக் கோபத்தைக் கொடுத்தது. "என்னிடம் விளையாடாதே! நீ தூங்கியிருந்தாலும் வெடிச் சத்தம் கேட்டதும், விழித்திருப்பாய்! அவன் வந்து, நீ அவனை ஒளித்து வைத்திருந்தாலும் வைத்திருக்கக்கூடும்! இந்த இடத்தைவிட்டு அவன் அதிக தூரம் போயிருக்க மாட்டான். அடிபட்ட அவன் எவ்வளவு தூரம் நடக்க முடியும்? இவ்வளவு தூரம் இரத்தம் சொட்டி வந்திருக்கிறது. ஒருவேளை வீட்டுக்குள் ஒளிந்திருந்தாலும் இருக்கலாம்! வீரர்களே! வீட்டுக்குள் போய்த் தேடிப்பாருங்கள்!" என்று காம்பா உத்தரவிட்டான்.

பார்த்துனத்தோ எழுந்து நின்றான். "வீட்டுக்குள் தாராளமாகப் போய்த் தேடுங்கள்! ஆனால் தானில்லாத சமயத்தில் வீட்டுக்குள் யாராவது புகுந்தது தெரிந்தால், அப்பாவுக்குக் கோபம் வரலாம்!"

காம்பாவுக்குக் கோபம் வந்தது. "என்னடா! என்னை மிரட்டுகிறாய்? இப்படி நயமாகக் கேட்டால் சொல்ல மாட்டாய், உனக்கு இருபது சவுக்கடிகள் தந்தால், உண்மையைச் சொல்லிவிடுவாய்."

பையன் அசையவில்லை. "என் அப்பா மத்தே பால்கன்!" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னான்.

"உன்னைக் கொண்டுபோய், என்ன செய்கிறேன் பார்! சிறையில் போட்டு, சித்திரவதை செய்து, கடைசியாகச் சிரச்சேதம் செய்துவிடுவேன்! என்ன நினைத்துக்கொண்டாய்? ஓடிவந்தவன் எங்கேயிருக்கிறான் என்பதைமட்டும் சொல்லிவிடு! உன்னை விட்டுவிடுகிறேன்!"

பையன் கவனிக்காததுபோல் அலட்சியத்துடன், "என் அப்பா மத்தே பால்கன்!" என்று சொன்னான்.

காம்பாவுக்குக் கோபம் கொப்பளித்தது. துடுக்குத்தனமாக அவன் ஏதாவது செய்திருக்கக்கூடும். ஆனால் பக்கத்திலிருந்த வீரர்களில் ஒருவன் காம்பாவைத் தடுத்து "மத்தே பால்கனை விரோதித்துக்கொள்வது நல்லதல்ல!" என்று சொன்னார்கள்.

காம்பாவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பார்த்துனத்தோ பூனைக்குட்டிகளைத் தடவிக்கொண்டிருந்தான். வீரர்களில் ஒருவன் போய் சலிப்புடன் வைக்கோற்போரைத் துப்பாக்கி முனையால் குத்திப் பார்த்தான். ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

பையனை மிரட்டினால் காரியம் நடைபெறாது என்று கண்டுகொண்ட காம்பா, அவனுக்கு ஏதாவது இதமாகச் சொல்லி ஆசை காட்ட முன்வந்தான்.

"இதோபார்! நீ எனக்கு வேண்டிய சொந்தக்காரன்! ஆதலால் உன்னை ஒன்றும் செய்ய மனமில்லை! அவன் ஒளிந்திருக்கும் இடத்தைச் சொன்னால் உனக்கு இந்த கடிகாரத்தை இனாமாகத் தருவேன்!" என்று காம்பா தன் பையிலிருந்த தங்கமுலாம் பூசிய கடிகாரத்தை எடுத்து ஆட்டினான்.

கடிகாரம் பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

பார்த்துனத்தோ தன் கண்களை வேறுபக்கம் திருப்பி "நான் பெரியவனானதும் இதைப் போல வாங்கிக் கொள்ளமுடியும்" என்றான்.

பையன் மனதில் இலேசாக ஆசை மூண்டதைக் கண்ட காம்பா "அதற்கு எவ்வளவு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்! ஒரு குறிப்பு காட்டினாலும் போதும், இந்த கடிகாரம் இப்பொழுதே உனக்குச் சொந்தமாகிவிடும். நன்றாகப் பார்! அழகான கடிகாரம்!" என்று சங்கிலியைப் பிடித்து, அவன் முகத்துக்கெதிரே கடிகாரத்தை ஆட விட்டான்.

பையனின் கண்ணெதிரே கடிகாரம் மின்னியது, ஆடியது.

"எனக்கு வேடிக்கைக் காட்ட வேண்டாம், போங்கள்!" என்று பையன் திரும்பினான்.

"வேடிக்கையல்ல, அவன் ஒளிந்திருக்கும் இடத்தைச் சொன்னால், இந்தக் கடிகாரம் உனக்கேதான்! நீயே வைத்துக் கொள்ளலாம்! சத்தியமாக நான் இதைத் தந்து விடுவேன்! அது நிச்சயம், நீ மட்டும் சொன்னால்!"

கடிகாரம் ஆடியது. பையன் வலது கையை மெதுவாக நீட்டினான். சங்கிலியைப் பிடித்தபடி, காம்பா கடிகாரம் அவன் கையில் உரசிச் செல்லும்படி ஆட்டினான். பையனால் ஆசையை அடக்க முடியவில்லை. கடிகாரம் பளபளவென்று மின்னியது, எழுத்துக்கள் அழகாக இருந்தன. புதுக் கடிகாரம்! அழகான கடிகாரம்! பையனின் கண்களில் ஆவல் வளர்ந்தது! கடைசியாக, இடது கையை நீட்டி வைக்கோற்போரைச் சுட்டிக் காட்டினான்! கியானத்தோ அங்கு ஒளிந்துகொண்டிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட காம்பா, கடிகாரத்தைப் பையன்கையில் போட்டு, சந்தடி செய்யாமல் வீரர்களுடன் வைக்கோற் போரைச் சூழ்ந்து, வைக்கோலைப்புரட்டச் சொன்னான்.

வைக்கோல் புரட்டப்பட்டது. கடைசியாக ஏதோ அசைவது தெரிந்தது. கத்தியுடன் அவன் எழுந்து குத்த வந்தான். மரத்துப்போன கால்களில் நிற்க முடியாமல் விழுந்துவிட்டான். வீரர்கள் கத்தியைப் பிடுங்கி, அவன் கைகளைப் பின்புறமாகக் கட்டி வெளியே கொண்டுவந்து போட்டார்கள்.

கட்டுப்பட்ட கியானத்தோ, புரண்டு படுத்தான். அப்பொழுதுபையன் பார்த்துனத்தோ நிற்பது தெரிந்தது, "துரோகிப்பயல்!" என்று உறுமிக் கொண்டுவேறு பக்கம் புரண்டு கொண்டான். தான் வாங்கிய வெள்ளிக்காசை பையன் வீசி எறிந்தான், கைதி அதைப் பார்க்க மறுத்தான்.

கியானத்தோவின் கால் புண்களுக்குக் கட்டுக்கட்டி அவனை அழைத்துப் போக வீரர்கள் தயாரானார்கள். அந்தச் சமயத்தில் மத்தே பால்கனும் அவன் மனைவியும் வந்தார்கள். மனைவியின் தலையில் ஒரு மூட்டை இருந்தது.

தன் வீட்டுக்கெதிரில் வீரர்கள் நிற்பதைக் கண்டதும், தன்னைப் பிடிக்க வந்திருக்கிறார்களோ என்ற ஐயம் உண்டானது. சண்டை சச்சரவு எதிலும் தலையிடாமல் பால்கன் ஒதுங்கி இருக்கிறான். இருந்தாலும் அவர்கள் ஏன் வந்திருக்கிறார்கள் என்று புரியவில்லை. "மூட்டையை கீழே வைத்துவிட்டு, ஒரு துப்பாக்கியை வைத்துக்கொள்!" என்று மனைவிக்குக் கட்டளை தந்து, ஒரு துப்பாக்கியை அவளிடம் கொடுத்தான். மற்றொரு துப்பாக்கியை உயர்த்திப் பிடித்து மெதுவாக முன் வந்தான். சிறிது எதிர்ப்பு காணப்பட்டாலும் பக்கத்தில் மறைந்துசுட அவன் தயாராக இருந்தான்.

பால்கன் துப்பாக்கியுடன் வருவதைப் பார்த்த காம்பாவுக்குத் திகில் பிறந்தது. "ஒருவேளை கைதியானவனுக்கு பால்கன் உறவினனாக இருப்பானோ? இருந்தால் ஆபத்தாயிற்றே! அவன் வரும் கடுமையைப் பார்த்தால், சிறிது எதிர்ப்பு வந்தாலும் நம்மெல்லோரையும் பறவைகளைச் சுட்டுத் தள்ளுவதுபோலத் தள்ளிவிடுவானே!" என்று காம்பாவுக்கு பயம் பிறந்தது.

கடைசியாக பயத்தின் மத்தியில் ஒரு துணிச்சலுடன் தனியாகக் கையை நீட்டி முன்னால் வந்து, "வாருங்கள்! நான்தான் காம்பா! உங்களுடைய உறவினன்!" என்று வரவேற்றான்.

மத்தே பால்கன் ஆ[illegible]தில்லை என்று உணர்ந்து துப்பாக்கியைத் தணித்துக் கொண்டான்.

"உங்களைப் பார்த்து நீண்ட நாட்களாயிருக்கிறது! எப்படியம்மா, இருக்கிறீர்கள்?" என்று இருவரையும் காம்பா விசாரித்தான். "ஒரு முரட்டு ஆளைப் பிடிக்க வந்தேன். கடைசியாக நல்ல வேளையாகப் பிடித்தும்விட்டேன். கட்டுப்பட்டு, அதோ கிடக்கிறான். அவன்தான் அரசாங்கத்தார் நீண்ட நாட்களாகத் தே[illegible]யலையப்பட்ட கியானத்தோ!"

"ஆமாம்! அவன் எல்லோருக்கும் தொந்தரவு கொடுத்துக்கொண்டிருந்தான். என்னுடைய பசுமாட்டைக்கூட ஒரு சமயம் திருடிப் போய்விட்டான்!"

பால்கன் சொன்னதும் காம்பாவுக்குப் பெருமூச்சு வந்தது.

"ஆனால் பாவம்! சாப்பிடக் கூட வழியில்லாமல் அவன் திண்டாடினான்!" என்று பால்கன் பரிதாபப்பட்டான்.

"இருந்தாலும் அவன் மூர்க்கத்தனமாகப் போராடினான், என் வீரர்களில் ஒருவன் இறந்தான், மற்றொருவனுக்குக் கை முறிந்துவிட்டது. கடைசியாக இங்கு வந்து ஒளிந்து கொண்டான். உன் பையன் பார்த்துனத்தோ இல்லாவிட்டால் அவனை என்னால் கண்டுபிடித்திருக்க முடியாது"

"என் பையனா?" பால்கன் திடுக்கிட்டான்.

"பார்த்துனத்தோவா?" தாய் பதற்றத்துடன் கேட்டாள்.

"ஆமாம்! சிறுவனாயிருந்தாலும், புத்திசாலிப்பையன்! கியானத்தோ வைக்கோற்போருக்குள் மறைந்திருப்பதை அவன்தான் காட்டினான்." காம்பா உற்சாகத்துடன் பேசினான். "அரசாங்கத்திடம் சொல்லி, அவனுக்கும் உங்களுக்கும் பரிசுகள் தரச் செய்கிறேன்."

பால்கன் தலையைத் தொங்கப்போட்டு, "அவமானம்!" என முணுமுணுத்துக்கொண்டான்.

சந்தனம்

திராவிடத்தின் சிறப்புக்குரிய செல்வங்களிலே சந்தனம் ஒன்றாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மேலைநாட்டினர் விரும்பிப் போற்றி வாங்கும் ஒரு பொருளாகச் சந்தனம் இருந்து வருகிறது. வெளிநாட்டு நாணயங்களை ஈட்டித்தரும் பொருள்களிலே சந்தனமும் ஒன்று.

சென்னை, மைசூர், குடகு ஆகிய மாநிலங்களில் உற்பத்தியாகும் சந்தனம் உலக உற்பத்தியில் நூற்றுக்கு எழுபது பங்கு ஆகும்.

திராவிடத்திலிருந்து தயாரிக்கப்படும் சந்தனத் தைலம் உலகச் சந்தையில் மிகவும் விரும்பப்படும் ஒன்றாக இருந்து வருகிறது. அதன் தரமும், உற்பத்தியும் பெருகும் வகையில் அரசினரால் முயற்சிகள் எடுக்கப்பட்டால், திராவிடத்தின் வளம் பெருக அதுவும் வழி செய்து தருவதாக அமையும்.

வீட்டருகில் அவர்கள் வந்து ர்ந்தார்கள். கைதியை ழைத்துப்போக, வீரர்கள் யாராக இருந்தார்கள். காம்வுடன் பால்கனும் அவன் னைவியும் வருவதைப் பார்த்த கதி, பால்கனின் வீட்டுக் கதவப் பார்த்து துப்பி "துரோயின் வீடு!" என்று சொன்ன்.

செத்துப்போக விரும்புபன்தான், பால்கன் முன்னிலைல் அந்த வார்த்தையைச் சால்லியிருக்க முடியும். ஆனல் பால்கன் ஏதும் செய்யல்லை. தலையில் கைவைத்துக் காண்டு குழம்பியவனாய் நின்ன்.

பார்த்துனத்தோ உள்ளிந்து ஒரு குவளையில் பால் காண்டுவந்து கைதியிடம் ட்டினான். கைதி கியானத்தா அவ்வளவு களைப்புடனும் ாகத்துடனும் இருந்தான். ார்த்துனத்தோவைப் பார்த்ததும், "என்னருகில் வராதே, பா!" என்று உதறித்தள்ளி, "இந்தாப்பா! ஒரு குவளை ண்ணீர் தா!" என்று வீரன் ருவனிடம் கேட்டான்.

சற்றுமுன் எந்த வீரனுடன் அவன் இரத்தம் சிந்தப் போாடினானோ அவன் கையால் ண்ணீர் வாங்கி, கைதி திருப்தியுடன் குடித்தான்.

காம்பா புறப்பட்டான். கைதியை அழைத்துக் கொண்டு வீரர்கள் பின் தொடர்ந்தார்கள். கடைசியாக போகும்பொழுது "போய்வருகிறேன்!" என பால்கனிடம் காம்பா சொல்லிக்கொண்டான். பால்கன் எதுவும் பேசால் உட்கார்ந்திருந்தான்.

சிறிதுநேரம் அசையாமல் பால்கன் இருந்தான். சிறுவன் பார்த்துனத்தோ பயத்துடன் தந்தையையும் தாயையும் மாறிமாறிப் பார்த்தபடி இருந்தான்.

"நல்ல வேலையைத்தான் செய்தாய்!" என்று பால்கன் சொன்னான். மெதுவாக, அமைதியாகச் சொன்னான். ஆனல் பழக்கப்பட்டவர்களுக்கு அதில் இருந்த கடுமை தெரியும்.

"அப்பா!" என்று அழுது கொண்டு தந்தையின் காலைக் கட்டிப் பிடிக்க பையன் வந்தான். அவனைத் தள்ளி "எட்டிப் போ!" என்று பால்கன் உறுமினன்.

பையன் தேம்பித் தேம்பி அழுதான். தாய் அருகில் வந்தபொழுது, மகனின் பையிலிருந்த கடிகாரச் சங்கிலி தெரிந்தது. கடிகாரத்தை எடுத்து "இது ஏது?" என்று கேட்டாள்.

"வந்தாரே, காம்பா, அவர் கொடுத்தது!" என்று அழுது கொண்டே சொன்னன்.

பால்கன் அந்தக்கடிகாரத்தைப் பிடுங்கி, கல்லின் மேல் ஆயிரஞ் சுக்கல்களாகப் போகும்படி அடித்தான்.

"இவன் என் மகன்தானா?" என்று பால்கன் கோபத்துடன் கேட்டான்.

அவன் மனைவியின் முகம் சிவந்தது. "என்ன கேட்கிறீர்கள்? அதுவும் உங்கள் மனைவியிடம் கேட்கக்கூடிய கேள்வியா இது?"

"சரி, சரி! நமது பரம்பரையில், நம்பிக்கை தந்து பின் காட்டிக் கொடுக்கும் துரோகத்தைச் செய்தவன் இவன்தான் முதல்தடவையாக!"

அப்பாவின் கோபத்தைக் கண்டதும் பார்த்துனத்தோவுக்கு அழுகை அதிகமானது.

"என்னுடன் வா!" என்று மத்தே பால்கன் நடந்தான். பையன் பின்தொடர்ந்தான்.

அவர்கள் போவதைப் பார்த்ததும், தாய்க்குப் பயம்வந்தது. ஓடிப்போய், கணவனின் முன் விழுந்து "வேண்டாம், வேண்டாம்! அவன் உங்களுடைய மகன்!" என்று கதறினள்.

"நீ விலகிப் போ! எனக்கு எல்லாம் தெரியும்! நான் அவனுடைய தந்தை!" என்று பால்கன் நடந்தான்.

பள்ளத் தாக்கில் பாறைகள் அடர்ந்த இடத்துக்கு பால்கன் வந்ததும், ஒரு பாறைக்கு அருகில் நின்று, துப்பாக்கிக் கட்டையால் மண்ணைத் தட்டிப் பார்த்தான். மண் அசைந்து கொடுத்தது.

"இங்கு வந்து நில்!" என்று பையனுக்குக் கட்டளையிட்டான்.

"அப்பா ஒன்றும் செய்யாதீர்கள்!" என்று பையன் அழுதான்.

"போய், அங்கு நில்!" குரல் கடுமையாக இருந்தது.

பையன் நடுக்கத்துடன் போய் நின்றான்.

"உனக்குத் தெரிந்த பிரார்த்தனைகளைச் சொல்லிக்கொள்!"

பையன் தனக்குத் தெரிந்த பிரார்த்தனைகளை முணுமுணுத்தான்.

"முடிந்ததா?"

"அப்பா! இனிமேல் அப்படிச் செய்யவே மாட்டேன்! காம்பாவிடம் கெஞ்சிக் கேட்டு கியானத்தோவை விட்டுவிடச் செய்கிறேன்! அப்பா! ஒன்றும் செய்யாதீர்கள்!"

மத்தே பால்கன் துப்பாக்கியை உயர்த்தினன். "அப்பா!" என்று கூவி மகன் தாவி விழக் கிளம்பினன். அதற்கு நேரம் தரப்படவில்லை. பால்கனின் விரல் அசைந்தது. துப்பாக்கி வெடித்தது. பையன் கீழே விழுந்தான்.

விழுந்த பிணத்தைத் திரும்பிப் பார்க்காமல், பால்கன் வீட்டுக்கு வந்தான். தோட்டத்திலிருந்த மண்வெட்டியை எடுத்துக்கொண்டு கிளம்பினன். வெடிச் சத்தம் கேட்டு, மிரட்சியுடன் இருந்த தாய் அவன் முன் வந்து "என்ன நடந்தது?" என்று கேட்டாள்.

"நீதி தரப்பட்டது!"

"பையன் எங்கே?"

"பள்ளத்தாக்கில்! அவனைப் புதைக்க நான்போகிறேன். நம்முடன் இருப்பதற்காக மூத்த மருமகனை இங்கு வரச்சொல்லி ஆளை அனுப்பு!"

இயற்கைக் காட்சி

பாலை நிலம்

ஆழ்ந்த பள்ளத்தாக்குகளோடு கூடிய மலை. அதன் உச்சப் பகுதிகள் குளிர்ந்து காணப்படுகின்றன. அதன் சரிவிலே ஓங்கி வளர்ந்த வலிமை வாய்ந்த ஈச்சமரங்கள் தழைத்துக் காணப்படுகின்றன. ஈச்ச மரங்கள் தலைவிரிக் கோலமாய் அசைந்தாட காற்று சுழன்று சுழன்று வீசுகிறது. மலையை அடுத்து கல்லும் முள்ளும் பொந்தும் புதர்களும் நிரம்பிக் காணப்படும் பாழ்பட்ட வெளியான பாலைநிலம் தென்படுகின்றது. அந்தப் பாலைநிலம் வழியே வழிப்போக்கர்கள் செல்லுகிறார்கள். அவர்கள் எதிர்பார்க்காத நிலையில் புதர்களில் பதுங்கிக்கிடக்கும் புலிக்குட்டிகள் அவர்கள் மீது பாய்ந்து அவர்களைக் கொன்று குருதியைக் குடிக்கின்றன. அதனல் சிவந்த குருதிக் கறைகள் புலிக்குட்டிகளின் தலையில் படிந்திருப்பதோடு, அவற்றின் வாயினின்றும் குருதி சொட்டிக்கொண்டிருக்கின்றது. அவைகள் அப்படியே இண்டங்கொடியும், ஈங்கைக் கொடியும் ஒரு சேரப் படர்ந்துகிடக்கும் புதர்களில் போய்ப் பதுங்கிக்கொள்கின்றன. மீண்டும் மாலைப் பொழுதில் அப்பக்கம் வழிப்போக்கர் யாரேனும் வருகிறார்களா என்று புதர்களை நீக்கிக் கொண்டு எட்டிப் பார்க்கின்றன. அப்படிப்பட்ட பாலைநிலம் அது.

அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றத்
தொலிவல் ஈந்தின் உலவை யம்காட்டு
ஆறுசெல் மாக்கள் சென்னி யெறிந்த
செம்மறுத் தலைய நெய்த்தோர் வாய
வல்லியம் பெந்தலைக் குருளை மாலை
மரல் நோக்கும் இண்டிவர் ஈங்கைய சுரனே

நற்றிணை-2.
வரிகள்: 1-6,

பாடியவர்:
பெரும்பதுமனார்.

[பொழிப்புரை: சுரமோ, ஆழ்ந்து படக் கிடந்த பெரிய குளிர்ச்சியை யுடைய மலையிடத்துத் தழைத்த வலிய ஈச்ச மரங்களையுடைய, காற்று சுழன்று வீசும் காட்டின் கண்ணே, நெறிக்கொண்டு செல்லும் மக்களுடைய தலையை மோதிய தனலே, குருதி படிந்த சிவந்த கறைபட்ட தலையையுடையனவும், குருதி ஒழுகும் வாயையுடையனவுமாகிய பெரிய தலையையுடைய புலிக்குட்டிகள் இம்மாலைப் பொழுதில் தாம் பதுங்கியிருக்கும் மரப்புதர்களை நீக்கிக்கொண்டு நோக்கும் இண்டங் கொடியோடு ஒரு சேரப் படர்கின்ற ஈங்கையை யுடையதாகும்.

அழுந்துபட-ஆழ்ந்துபட: தண்-குளிர்ந்த; குன்றம்-மலை; ஒலி-தழைத்த; வல்-வலிய; ஈந்து-ஈச்ச மரம்; உலவை-காற்று; அம்-அழகிய ஆறு-வழி; சென்னி-தலை; மறு-கறை நெய்த்தோர்-குருதி; வல்லியம்-புலி; குருளை-குட்டி; இவர்-படர்கின்ற.]

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ. 15·00
ஓராண்டு	...	ரூ. 8·00
ஆறுமாதம்	...	ரூ. 4·00
தனி இதழ்	...	16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ. 18·75
ஓராண்டு	...	ரூ. 10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...	20 காசு

1 கோடி ரூபாய்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரசாங்கம் எழுதிக் கொடுத்துள்ளது!

இந்திய அரசாங்கத்தின் கணக்கு வழக்குகளைப் பரிசோதிக்க, அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள பெரிய அதிகாரிகளே பின்னால் அந்த ஒப்பந்தத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள், இப்படி மோசமான ஒப்பந்தத்தை ஒரு அரசாங்கம் எப்படி ஒப்புக்கொண்டது? என்று இதற்கு முன் இருந்த இந்திய அரசாங்க ஆய்வுக் கணக்கர். (ஆடிட்டர் ஜெனரல்) நரகரி ராவ் என்பவர். "இதைப்போன்று குற்றங்கள் நிறைந்த, குழப்பமான ஒபபந்தத்தைப் பார்த்தது கிடையாது......இந்த ஒப்பந்தத்தைப் பார்த்தபோது திடுக்கிட்டேன். ஆரம்பத்திலிருந்து சந்தேகத்துக்கு இடம் தரும் வகையில் அது இருக்கிறது" என்று இந்திய இரயில்வே இலாகா டாடா கம்பனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்.

நரகரி ராவ் அவர்களுக்குப் பின்பதவியேற்று, தற்பொழுது இந்திய அரசாங்கத்தின் ஆய்வுக் கணக்கராக இருக்கும் ஏ. கே. சந்தா அவர்கள் அந்த ஒப்பந்தத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது "அந்த ஒப்பந்தம் புரியவேயில்லை. அதில் பல பகுதிகள் குழப்பமாக இருக்கின்றன. அந்த ஒப்பந்தத்தைப் பார்க்கும் பொழுது சோகம் உண்டாகிறது, இந்த நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்ற கவலை உண்டாகிறது." என்று கூறியுள்ளார்.

இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இரண்டு பெரும் கணக்கு ஆய்வாளர்களே அப்படிச் சொல்லிவிட்டார்கள். பண்டித நேருவின் மருமகனும் இந்திரா காந்தியின் மணாளருமான பிரோசு காந்தி மக்கள் சபையில் பேசும்பொழுது "இந்த ஒப்பந்தம் வேடிக்கையானது, சிக்கல் நிறைந்தது, குழப்பம் மிகுந்தது, மிகக் கூர்ந்த புத்திசாலிகளைக்கூடத் திணறடிக்க வைத்துள்ளது" என்று அந்த ஒப்பந்தத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்.

அவ்வளவு மோசமான ஒப்பந்தத்தை, சுதந்தரம் கிடைத்த ஐந்தாவது நாள் மிக அவசர அவசரமாக இரயில்வே இலாகா எழுதிக்கொடுத்தது. அந்த ஒப்பந்தம் "சிக்கல் நிறைந்து குழப்பம் மிகுந்து" இருப்பதாக ஏன் சொல்கிறார்களென்றால், எந்தப் பகுதியை எடுத்தாலும் டாடாவுக்குச் சாதகமாக அரசாங்கத்துக்குப் பாதகமாக இருக்கிறதாம்!

ஒப்பந்தம் எழுதப்பட்டது 1947ல், ஆனால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட தேதி 1945ல்! 1947ல் எழுதும்பொழுதே, 1945லிருந்து அதற்கு உரிமைதந்துவிட்டார்கள்! இதனால் சில வகைகளில் டாடா கம்பனிக்குச் சலுகைகள் கிடைத்தது. அமுலாக்கப்படுவது இரண்டாண்டுகளுக்கு முன்னிருந்தே செய்யப்பட்டதால், புதிதாக வந்த அரசாங்கம் தான் இல்லாத காலத்தில் நிகழ்ந்தவைகளுக்குக்கூட பொறுப்பேற்க வேண்டியிருந்தது! எந்த தனிப்பட்ட மனிதனும் எழுதிக்கொடுக்கத் தயங்குவான், ஆனால் ஒரு அரசாங்கம், அதிலும் புதிதாக உண்டான அரசாங்கம் ஒரு குழப்பமான ஒப்பந்தத்தை எழுதி இரண்டாண்டுகளுக்கு முன்பிருந்தே அதை ஒப்புக்கொள்வது வேடிக்கையான நிகழ்ச்சி!

என்ஜின்கள் வாங்குவதற்காக டாடா கம்பனியுடன் இந்திய அரசாங்கம் ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு, என்ஜின் விலை எவ்வளவு என்று அரசாங்கத்தால் சொல்லமுடியவில்லை! என்ஜின் வாங்குவதற்கு, நீண்ட ஒப்பந்தம், ஆனால் என்ஜின் விலையைச் சொல்லத்தெரியவில்லை!

என்ஜின் விலையை நிர்ணயிப்பதில் மத்திய அரசாங்கத்தின் விருப்பம்போல் விலை ஏற்றி இறக்கிக் கூறப்படுகின்றன!

மார்க்கட்டில் இருந்த நிலைமைப்படி ஒரு என்ஜின் விலை 5 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய்!

டாடா முதலில் போட்ட விலை 6 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய்!

டாடா கம்பனி இரண்டாவது சொன்னவிலை 7 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்!

இந்த விலை அதிகமென்று பட்டதால் டாடா கம்பனியை மீண்டும் சரியானவிலை கொடுக்கும்படி அரசாங்கம் கேட்டது.

கடைசியாக டாடா கம்பெனியார் ஒரு என்ஜின் விலை 6 லட்சத்து 45 ஆயிரம் என்று முடிவாகச் சொன்னார்கள்.

நமது கனம் பொருந்திய மத்திய அரசாங்கம் என்ன செய்தது தெரியுமா? ஒரு என்ஜினுக்கு 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று அரசாங்கம் டாடா கம்பெனிக்குத் தெரிவித்தது!

மார்க்கட்விலை 5 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய்! டாடா கேட்டது ஒரு என்ஜினுக்கு 6 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய்! இந்த விலை "அதிகமென்று" டில்லி அரசாங்கம் நிர்ணயித்தது 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய்!

டாடா கம்பனி கேட்ட விலையே அதிகமானது; அதிலும் அந்தக் கம்பனி கேட்ட விலையைவிட இன்னும் 45 ஆயிரம் ரூபாய் கூட வைத்து அரசாங்கம் வாங்கியிருக்கிறது! இதை யாராவது கடைத்தெருவில் செய்தால், "பைத்தியக்காரத்தனம்" என்று சொல்வார்கள், ஆனால் இந்திய அரசாங்கம் அதை செய்திருக்கிறது!

நியாயமான விலையைவிட என்ஜின் ஒன்றுக்கு ஒரு லட்சம் அதிகமாகக் கொடுப்பது மட்டுமல்ல, ஒப்பந்த ஆரம்பத்தில் டாடா கம்பனிக்கு இந்திய அரசாங்கம் "இனமாக" 7 லட்ச ரூபாய்கள் கொடுத்தது!

அதற்கப்புறம் ஒப்பந்தப்படி, கம்பனி அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டியிருந்த 12 லட்ச ரூபாயை வாங்காமல், விட்டுவிட்டது!

இதெல்லாவற்றையும் விட வேடிக்கையான ஒரு செய்தி என்னவென்றால், கம்பனிக்குப் போடப்பட்ட மூலதனம் 4கோடி 80லட்ச ரூபாய்! அதில் இந்திய அரசாங்கம் போட்டுள்ள தொகை 4 கோடி 60 லட்சம் ரூபாய் டாடா முதலாளி போட்டது 20 லட்சம் ரூபாய்! ஆனால் கம்பனியின் நிர்வாகம், இலாபம் எல்லாம் டாடாவிடம் இருக்கிறது!

இதெல்லாவற்றையும் விட, என்ஜின செய்யும் வேலை ஆரம்ப வளர்ச்சி நிலையில் இருப்பதால், கம்பனிக்கு "நஷ்ட ஈடாக" அரசாங்கம் ஆண்டு தோறும் செலுத்த முற்பட்டுள்ளது. "இவ்வாறு அரசாங்கம் டாடா கம்பனிக்கு தரப்போகும் தொகை, ஏழு அல்லது எட்டு ஆண்டுகளில் 4கோடி அல்லது $4\frac{1}{2}$ கோடி ரூபாய் ஆகிவிடும். அதன் கம்பனியின் முழுமூலதனமும் டாடாவுக்குக் கிடைத்துவிடும். இதன்முடிவு என்னவென்றால், அரசாங்கம் ஒரு கம்பனியை $4\frac{1}{2}$ கோடியில் உண்டாக்கி தனிப்பட்ட ஒருவருக்கு இனமாகக் கொடுத்துவிடுவது போல் ஆகிவிடும்" என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் முறையிட்டுள்ளனர்.

டாடாவுக்கு ஒரு கம்பனி "இனமாகக்" கிடைக்க அரசாங்கப் பணம் எப்படிச் செலவாகிறது பாருங்கள்!

அதிகவரிகள் போடுகிறார்கள், சர்க்கரை மீது நெருப்புப்பெட்டி மீது எண்ணெய் மீது என்று ஏராளமான வரிகளைப் போட்டு, ஏழைகளைக் கசக்கி பிழிந்து வரி எடுக்கிறார்கள்.

ஏழைகள் செலுத்துகிற வரிப்பணம் டில்லி கஜானாவில் போய் விழுகிறது. அங்கிரு… அந்தப் பணம் டாடா மு… ளியிடம் போய்விடுகிறது.

எந்தக் கணக்கிலும் சே… மல், ஒப்பந்தத்தில் இல்ல… படி சரியான காரணமில்… மல் 1 கோடி 14 லட்சம் ரூப… களை இந்திய அரசா… டாடா கம்பெனிக்குத் தந்… ளது.

தேர்தல் சமயத்தில், டா… வின் இரும்புக் கம்பனி 10 … சம் ரூபாய்களை காங்கிரசுக் … சிக்குத் தருகிறது!

யார் இதில் ஏமாந்தவர்க… டாடாவா? இல்லை, 10 லட்… ஒரு கையால் கொடுத்… 1 கோடி 14 லட்சம் இன்னொ… கையில் கிடைத்தது!

காங்கிரசு ஏமாறவில்லை. … கோடி 14 லட்சம் அரசா… பணம் போயிற்று! கணக்… காட்டிய வகையில் 10 லட்… கட்சிக்குக் கிடைத்தது!

டாடாவுக்கு இலாபம்!
காங்கிரசுக்கு இலாபம்!

கடைசியாக ஏமாந்த… பொதுமக்கள்! நஷ்டமான… அவர்கள் கொடுத்த வ… பணம்!

அரசாங்கம் கொடுத்… பணம் 4 கோடி 60 லட்… டாடாவின் பணம் 20 லட்ச… அப்படியிருக்கையில் அந்… தொழிற்சாலையை அரசாங்க… ஏன் ஏற்று நடத்தக் கூடா… அதை ஏன் டாடா முதலா… கள் கையிலேயே ஏன் விட்… வைக்க வேண்டும்?

காங்கிரசு பேசுவது "சம… மம்" உதவி செய்வது டா… வுக்கு!

விரயமாக்கப் பட்டுள்… பணத்துக்கு காங்கிரசு அ… சாங்கம் பதில் சொல்லியா… வேண்டும்!

<u>தலைமைக்கழக அறிக்கை</u>

திராவிட நாடு விடுதலை வாரம்

—0—

செப்டம்பர் 17-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 9-வது ஆண்டு துவக்க நாளான 17-9-1957-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை திராவிட நாடு விடுதலை வாரமாகக் கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும் கழகச் சார்புள்ள அமைப்புகளையும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிறோம்.

பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை-நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்தி நாட்டுப் பிரிவினைக்கான கருத்து விளக்கம் தருவதுடன், கழகப் போராட்டங்களில் உயிர்நீத்த தோழர்களுக்கு வீரவணக்கமும் செலுத்தக் கேட்டுக்கொள்கிறோம்.

'4—9—57'
'அறிவகம்'
சென்னை-13

அன்பன்;
இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

கலங்கரை விளக்கம்!

(நாஞ்சில் செ. அன்பெழில்)

திரைகடலின் அலைமுதுகில் தந்துவரும் கலங்களை கரைந்ழைக்கும் ஒளிவிளக்கு! நடுக் _லில் புயல்வீச்சால் திண்டா ் நாவாயில் திகைத்து நிற் ம் மக்களுக்கு நம்பிக்கைதரும் ழல் தீபம்! கத்துங்கடலில் த்தெடுக்கப்போனவன் கரை சருவோமா, அலைக்கு இரை ஈகுவோமா என்று திகைத்து ற்கும் வேளையில் கண்சிமிட்டி தம்பூட்டும் கலங்கரைவிளக் ் ! அணைந்துவிட்டது. அகி த்தையே காரிருள் ஆட்டிப் டைக்கிறது. அலைகடலின் ழுகுரல் காதைப் பிளக் றது. கலமிருப்போர் கண் ரால் கடல்மட்டம் உயர் றது!

கலைவானில் வலம் வந்த குத்தறிவுப்பரிதி! அறி வாளி பரப்பி அஞ்ஞான இரு கற்றிய சுயமரியாதை சூரி ன்! மெல்லியதன் கதிர்கரங் ளால் பூங்காவின் அழகையும், ள்ளினத்தின் களிப்பையும், தலத்தின் நலத்தையும் ளர்த்துவந்த ஆதவன்! மா ரம் என்ற மலைத்தொடரில் றைந்து விட்டான்! கதிரவ ின் ஒளிபெற்று அதன் லம் உறுப்பெற்றுத் திகழ்ந்த ண்மீன்களும், வான்மதியும் ளையிழந்தன, பொலிவற்றன. வலை இருள் கலைவானத்தை ம்பிக் கொண்டிருக்கிறது!!

சின்னஞ்சிறு ஊரின் நடுவே அமைந்திருந்த சிங்காரகேணி! ாவறண்டு வருவோர்க்கு நீர் ந்து வாழ்வளிக்கும் நல்ல தார் ஏரி! தவழ்ந்துவரும் தன்றலுக்கும் குளிரேற்றி ாடிவரும் மக்களுக்கு நலம் யக்கும் ஊருணி! சாவு என்ற காடுங்கரத்தால் உடைக்கப் ட்டு விட்டது. உடைப் படுத்த வேதனைப் பெரு வெள்ளம் அந்த சிற்றூரை ின்னுபின்னப் படுத்துகிறது. அச்சம், அவலம், அழுகுரல் ங்கும் கோரதாண்டவமாடு ின்றன!!!

ஆம்! கலைவாணர், நகைச் சுவையரசர், நாட்டின் ஒருநல்ல நம்பி, நாஞ்சில் தந்த கலைத் தலைவர், தென்னகத்துத் திரு விளக்கு, சிரிக்கவைத்து மக் களை சிந்திக்கவைக்கும் சிந்தனைச் சிற்பி, சீர்திருத்த செம் மல் திரு. என். எஸ். கிருஷ் ணன் தாங்கிநின்ற மனைவியை யும், தாவிவரும் குழந்தைகளை யும், உடன் பிறந்த தம்பியை யும், ஒட்டிவாழ்ந்த கலைஞர்களை யும், சுற்றத்தையும் நட்பையும் கதறியழவைத்துவிட்டுப்போய் விட்டார். புன்மைத் தேரை களாய் பொட்டுப்பூச்சிகளாய் வாழ்ந்த தமிழினத்தை புதுமை நாடி வழிகாட்டி அழைத்துச் செல்லும் வீரர்களுக்கு முன்னால் ஒளிகாட்டிச்சென்ற பெருந்தகை! 'கர்ணனுக்குப் பின் கொடை இல்லை' என்ற பழமொழியைப் பாழடித்து பல இலச்சக்கணக்கில் ரூபாய்களை அள்ளிக்கொடுத்த வள்ளல் தனனலம் பேணாது தன்னை தன்னிடம் அண்டிவருவோரையும் அடுத்து நிற்போரையும் வளர்த்து, வாழ்வளித்து, உயர்வித்து மகிழ்ந்த அண்ணல்! கலைவாணர் மூன்று கோடி தமிழர்களையும் கதறி துடிதுடிக்கவைத்து, எட்டுக் கோடி திராவிடர்களையும் ஏங்கி அழச்செய்து, நாற்பதுகோடி இந்தியர்கட்கும் அதிர்ச்சியூட்டி சிதையிலே சரண் புகுந்து விட்டார்.

தமிழகத்து வீதிகளிலே கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது! சென்னையிலே கரைபுரண்டு ஓடிய மக்கள் வெள்ளம் கவலையின் பேருருவாய் நின்றது! கலைஞர்களையும் தலைவர்களையும் அவலமும் உணர்ச்சியும் அழுத்திக் கொண்டிருந்தன! அந்த தூய திரு உடலை, தும்பைப் பூமேனியை கொடிய தீநாக்குகள் வளைத்துக்கொண்ட பொழுது மூன்றுகோடி இதயங்களும் மூண்டு எரிந்தன. அலமந்து அவலத்தால் அரற்றியழும் நமக்கு ஆறுதல் கூறுவார் யார்? தேறுதல் மொழிதான் ஏது?

அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல "அவர் நமக்குத் தந்தது ஆனந்தம், நாம் அவருக்குத் தருவது அழுகை. அவர் நமக்குக் கொடுத்தது சிரிப்பு, நாம் அவருக்குக் கொடுப்பது கண்ணீர்! சிரிப்பும் சிந்தனையும் இருதுருவங்கள். சிரிக்கத் தெரிந்தவன் சிந்திப்பதில்லை. சிந்திக்கத் தெரிந்தவன் சிரிப்பதில்லை, 'ஏண்டா, இளிச்சவாயா! கொஞ்சமாவது அறிவு இருக்கிறதா? எப்பொழுதும் சிரிப்பவனுக்கு உலகம் சூட்டும் பட்டம்! 'ஏம்பா' முகத்திலே களையே பிறக்காதோ. உம்மென்றிருக்கிறயே கொஞ்சம் பல்லையாவது காட்டேன், சிரிக்காத சிந்தனையாளனுக்கு உலகம் தரும் மதிப்பு! ஆனால் சிரிப்பு சிந்தனை என்ற இந்த இரு துருவங்களுக்கிடையே ஒரு பாலம் அமைத்துத் தந்த பெருமை கலைவாணரின் தனி உரிமை. சிரிப்பு, மனித இனத்திற்கு மட்டிலுமே உரிய தனிச் சிறப்பு பறவைக்கோ விலங்குக்கோ இல்லாத இப்பண்பை பாராட்டி சீராட்டி வளர்த்த புகழ் கலைவாணருக்குரியது.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கலைத் துறையில் பணிபுரிந்து வந்த நகைச்சுவையரசர் நூற்றுக்கு மேற்பட்ட திரைபடங்களிலும், ஆயிரக் கணக்கான நாடக அரங்கங்களிலும், பல்லாயிரக் கணக்கான மேடைகளிலும் தோன்றி நம்மை மகிழ்வித்தார் "காரமான மருந்தையும் இனிப்புப் பூச்சுடன் கலந்து நாமாக வாங்கி அதனை ஒன்றுக்குப் பத்தாக உள்ளே போட்டுக் கொள்ளக் கூடிய விதத்திலே" அவருடைய நடிப்புக்கலை அமைந்திருந்த காரணத்தால் நல்ல பல புதுக் கருத்துக்கள் பழமை விரும்பிகளின் உள்ளங்களிலே கூட ஊடுருவி உறைந்தன. நல்ல தம்பி மூலம் செய்த மது விலக்கு பிரச்சாரம். சகுந்தலையில் புகுத்திய பொதுவுடைமை தத்துவம், பணத்தில் செய்த திருக்குறள் முழக்கம் உத்தம புத்திரனில் நடத்திய 'அரிசன சேவை' இரங்கோன் இராதாவில் இடம்பெற்ற பூசாரியின் தில்லுமுல்லு, மணமகவில் நடத்திய ஐம்பதும் அறுபதும், மதுரை வீரனில் தந்த 'வைகை'க்குவிளக்கம். இராஜா இராணியில் பாடிய சிரிப்புப் பாடல், சாவி வாகனில் எடுத்துக் காட்டிய சாதிக் கொடுமைகள், இவை எதுவும் நம் நெஞ்சைவிட்டு நீங்காது, நினைவைவிட்டு மாறாது! கிந்தனார் இசைக்கதை நிகழ்ச்சி, வள்ளுவம், ஐம்பதும் அறுபதும் ஆகிய நாடகங்கள், காந்தி மகான் வள்ளுவர், வ. உ. சிதம்பரனார், நான் கண்ட இரசியா தி. மு. க. வரலாறு ஆகிய வில்லுப் பாட்டுக்கள் இவையெல்லாம் நம் இதயத்திலே நிறைந்து விட்டவை.

நகை, அவலம், இழிவு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, சமநிலை, என்ற ஒன்பது சுவைகளிலும் உயர்ந்த சுவையாக வைத்து எண்ணப்படுவது நகைச்சுவை. சிரிப்பால் உடல் வளரும், உள்ளம் மலரும் என்பது மனவியலார் கூற்று. எனவேதான் வள்ளுவப்பெருந்தகையும் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றார். சிரித்துப் பழகி மகிழ்கின்ற தன்மையற்றவர்க்கு இருளும் பகலும் ஒன்றே என்பது பொய்யிற் புலவரின் கருத்து.

"நகல்வல்லர் அல்லார்க்கு
[மாயிரு ஞாலம்
பகலும் பாற் பட்டன்று
[இருள்"

என்ற திருக்குறள் நகைச்சுவையின் இன்றியமையாமையை எடுத்துக் கூறுகின்றது. இத்தகைய நகைச்சுவையோடு சீர்திருத்தக் கருத்துக்களை கலந்து தந்த கலைவாணர் "கன்னித் தமிழ் கற்றோர் கண்களிலே நீரோட

என்னினியே செய்வதென்
றேதுமறியாதவராய்
நண்பரெலாம் வாய் மூடி
நடுங்கித் தடுமாறக்
கண்ணின் நீர் வெள்ளம்
கடலாய்ப் பெருக்கெடுக்க
மண்ணும் புலம்ப
மாவினமும் நின்றழுக
விண்ணும் வெறிச் சோட
விலங்கினமும் கண்டழுக
மண்ணுலகம் தான் மறந்து
மதிப்புலகம் சென்று
விட்டார்.

இயல் தமிழுக்கு கவிமணி, செய்கு தம்பி பாவலர், சிவராச பிள்ளை பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் இசைத் தமிழுக்கு இலக்குமணப் பிள்ளை, நாடகத் தமிழுக்கு டி.கே. எஸ். சகோதரர்கள், இப்படி எத்தனையோ பல பேரறிஞர்களைத் தந்து பெருமைபெற்ற நாஞ்சில் நாடு கலைத் துறைத் தலைவனாக, நகைச் சுவை அரசனாக, நாடு புகழும் வள்ளலாக திரு. என். எஸ். கிருஷ்ணனையும் தந்து பூரித்திருந்தது. குமரி முனையின் குதூகலம் காலதேவனின் இதயத்திலே பொறாமைத் தீயை வளர்த்தது போலும். காலதேவனால் வீழ்த்தப்பட்ட சாவுத் திரையிலே கலைவாணர் மறைந்து விட்டார்: ஆகஸ்டு பன்னிரண்டாம் நாள் கலைவாணர் பொது மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப் பட்டார் என்ற செய்தி வந்தது. கொடிய நோய் தான் எனினும் குணமடைந்து விடுவார் என்று நம்பிக்கை யூட்டினர் மருத்துவர்கள். ஓடோடிச் சென்றேன். மருத்துவ நிலையத்திற்கு, உடல் மெலிந்து படுக்கையில் கிடந்த கலைவாணரைப் பார்த்து கண்ணீர் உகுத்தேன். ஆகஸ்டு 27-ம்நாள் செவ்வாயன்று நான் சென்றபொழுது சிரித்த முகத்தோடு 'வாங்க தம்பி' என்றார். சிறிது நேரம் அந்த சிந்தனைச் சிற்பியின் சொல் கேட்கும் வாய்ப்பு பெற்றேன். செந்தமிழ் விறலி மதுரம் அம்மையார் அவர்களும் மகிழ்ச்சியோடு வெகு நேரம் உரையாடிக் கொண்டிருந்தார்கள். பத்து நாட்களில் வீடு செல்லலாம் என்றார்கள். சூழ்ந்து நின்றோர் அத்தனை பேரும் மகிழ்ச்சியில் திளைத்தோம். அடுத்த இரு நாட்களில் அலைக்கழிக்கும் செய்தியும், தொடர்ந்து அதிர்ச்சியூட்டும் செய்தியும்தான் வந்தன.

"வெள்ளைக் கலையுடுப்பான்
[வீறுடைய நெஞ்சத்தான்
பிள்ளைக் குழந்தை யெனப்
[பேசும் திருவாயன்
உள்ளும் புறமும ஒத்திருக்
[கும் நீர்மையினால்
கள்ளங் கபடிப்பான் கனிந்த
[மலர்முகத்தான்"

நினைவிழந்து கிடந்தார், நெடுநேரம் ஆகவில்லை கொஞ்சுகின்ற கண்ணிரண்டும் குவித்திமைகள் மூடின. அந்த விழி மூடிய நேரத்திலே தமிழன்னை நகையிழந்தாள்!

கிராமக் கலைக்கட்டு ஆதரவும் அரவணைப்பும் தரவேண்டும் என்பதிலே ஆர்வம் மிகுதி

யும் உடையவர். அதன் எதிரொலியை 'நல்ல தம்பியில்' காணலாம். ஒரு சமயம், ஒரு ஆண்டுக்கு முன்னர் நாஞ்சில் நாட்டையடுத்த குலசேகரபுரத்தையடுத்த தாமரைக் குளம் என்ற சிற்றூரில் ஒரு கோயிலில் விழா நடந்துகொண்டிருந்தது. கன்னியாகுமரிக்குச் சென்று கொண்டிருந்தவர் 'நையாண்டி மேளம்' ஒலி கேட்டு அந்த சிற்றூரின் எல்லையிலேயிருந்த சோலையில் வந்து சேர்ந்தார். காரிலிருந்து இறங்கிய கலைவாணர் அங்கே இசை 'நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருந்த அத்தனை கலைஞர்கட்கும் பூரிப்பு தரும் வகையில் சிறிதுநேரம் அந்த நிகழ்ச்சியை சுவைத்துக்கொண்டிருந்தார். பையிலிருந்த பணம் முழுவதையும் எடுத்து அந்த கிராமக் கலைஞர்கட்கு பரிசாக அளித்துப்பாராட்டிவிட்டுகாரேறிச் சென்றார். அவர் கலையார்வத்தை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சி இது. காரோட்டியின் 25 ஆண்டு பணிக்கு நடத்திய பாராட்டு விழா, திருச்சியிலே கட்டப்பட்டுள்ள கிந்தனார் குதிரைவண்டி நிலையம் போன்ற ஏழைக்கிரங்கும் அவர் உள்ளத்தை எடுத்துக் காட்டும். நாகர்கோவில் பூங்காவில் தனி முயற்சியால் கட்டப்பட்டுள்ள காந்தியார் நினைவுச் சின்னம் அந்த உத்தமர் மேல் அவர் கொண்டுள்ள பற்றுக்கு ஒரு எடுத்துக்காட்டு. அவர் படுக்கையறையிலே வைத்திருக்கும் புத்தர், ஏசு, காந்தி, பெரியார், அண்ணா படங்கள் அவர் அறிவாற்றலையும், அன்பு மனத்தையும் விளக்கிக் காட்டுவன. அவர் கடைசியாகக் கலந்துகொண்ட நிகழ்ச்சி தாரமங்கலம் ஊராட்சி மன்றத்தில் அறிஞர் அண்ணாவின் படத்திறப்பு. "நான் போகிறேன், எத்தனையோ பல நற்பணிகளை புரிந்து வரும் அண்ணா என் பணியையும் சேர்த்து நடத்தட்டும்" என்ற கருத்தை தெரிவிப்பதற்குத் தான் கலந்து கொண்டாரோ என்று நாம் எண்ணுகிறோம். 1946ல் ஆலந்தூரில் "பணக்காரனாக இறக்கமாட்டேன்" என்று அவர் பேசிய பேச்சும், நாகர்கோவிலில் நடந்த காந்தியார் வில்லுப் பாட்டு விழாவின் போது "பழைய சோடா வண்டியை இன்னும் வீட்டில் விட்டு வைத்திருக்கிறேன். அதை மீண்டும் இழுக்கவேண்டிய நிலை எனக்கு வந்தால், இழுப்பதற்காகவே நான் அவ்வாறு செய்துள்ளேன்" என்று அவர் கூறிய சொற்களும், பணத்தின் மேல் பற்றற்ற அவர் தன்மையையும், வறுமையைத் தாங்கும் வன்மையையும் எடுத்துரைப்பன. திருச்சி மாநாட்டு வில்லுப் பாட்டும், தேர்தல் நேரத்தில் ஆற்றிய தொண்டும், அறிஞர் அண்ணாவின் வெற்றியை இனிப்பு வழங்கி கொண்டாடிய பெருந்தன்மையும், கழகத்தலைவர்களை காராகிரக வாசலில் நின்று கட்டித் தழுவி வரவேற்ற காட்சியும் அவர் நம்மேல் கொண்டுள்ள பற்றையும் பாசத்தையும் விளக்குவன.

அவர் எழுதிய கட்டுரைகள் பல எளிய ஆனால் இனிய கருத்துக்களை உள்ளடக்கித் திகழ்கின்றன. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாரதியாரின் வாக்கியத்தின்படி நடக்கவேண்டும், அணுவளவும் தவறக்கூடாது என்ற தீவிர நோக்குடன் இப்போது பலர் உழவையும் தொழிலையும் தாங்கள் செய்வது கூடக்கிடையாது. அதற்கு வந்தனை செய்வதில் மட்டும் அவ்வளவு அக்கரை காட்டுகிறார்கள்" என்ற அவர் சொற்றொடர் நாட்டு நிலையை படம்பிடித்துக்காட்டுகின்றது. "உலகிற்கு முதல் விரோதிகள் சோம்பேறிகள் தான் ... இவ்வளவு பெரிய உலகைக் குட்டிச் சுவராக்க ஒரே ஒரு சோம்பேறி போதும் என்பது என் கருத்து இந்த நிலையில் நம்மிடையே பலப்பல சோம்பேறிகள் இருக்கிறார்கள்; ஆகவே உலகங்கள் பல, இன்னும் பற்றாக் குறையாக இருக்கின்றன" என்று அவர் கூறுவதை யார் மறுக்க முடியும்! "வரவர நாட்டில் உழைப்பு என்ற பதத்துக்கே 'கஷ்டம்' என்ற அர்த்தம் ஏற்பட ஆரம்பமாகியிருக்கிறது! சுவீகாரம் போவது-எதிலாவது பிரைசு அடிப்பது இது போன்ற சுளுவான வாழ்வைத் தான் வாழ்வாகக் கருதத் தலைப்பட்டு விட்டார்கள்! சாதாரணமாக கையெழுத்தைக் கூட அப்படியே அலட்சியமாக சுளுவாக, உழைப்பின்றி, கிறுக்கிப் போடுகிறார்கள். அது பார்வைக்கு 'காலரா-பிளேக்' கிருமிகள் போல காட்சியளிக்கிறது 'பாவம்! இன்னும் இப்படியே சில நூற்றாண்டுகள் போய்க் கொண்டிருக்குமாயின், மனிதனின் கால் கைகளில் உள்ள மூட்டுகள், உழைக்காத காரணங்களால் அப்படியே முதுகெலும்பு போல வளையாமல் நின்றாலும் அது வியப்புக்குரிய விஷயமல்ல-என்று இன்றே கருதுகிறேன்" என்ற அவர் பொன் மொழிகள் அவர் செயல் நெஞ்சத்தை விளக்கிக் காட்டுவன. இரவிபுதூர் என்ற ஊரின் புத்தகாலய வெள்ளி விழாவில் அவர் நிகழ்த்திய தலைமையுரை சிறந்த பல அறிவுச் செல்வங்களை உள்ளடக்கித் திகழ்கின்றது.

"ஊருணி நீர்நிறைந் தற்றே [உலகவாம்
பேரறி வாளன் திரு"

என்பது வள்ளுவர் வாக்கு. அந்த 'அறிவாளன் திரு' என்று குறிப்பிட்டது புத்தகசாலையைத்தான் என்று நினைக்கிறேன்!... உயிர்வாழ்க்கைக்கு உண்ணீர் இன்றியமையாமை போல, அறிவு வளர்ச்சிக்கு புத்தகாலயம் ஒவ்வொரு ஊருக்கும் தேவை. வாழ்க்கையில் வெற்றிகாண விரும்பும் ஒவ்வொருவரும் படிப்பதை தின சரி அனுட்டானங்களில் ஒன்றாகக் கொள்ளவேண்டும். மூளையில்லாத மனிதனைப் போன்றதுதான், நல்ல நூல்கள் இல்லாத வீடும். 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்று நாம் படித்திருக்கிறோம். இப்போது ஆறு இல்லாமலும் அழகாய் வாழமுடியும், குழாய் வந்துவிட்டது. 'நூல்நிலையமில்லா ஊருக்கு அறிவு பாழ்' என்று இப்பொழுது நாம் திருத்திப் படித்துக்கொள்ள வேண்டும். வீட்டுக்கு ஒளி தருவது நூல். மேனாட்டவரின் ஆடை, அணி, நடைபாவனைகளை மட்டும் காப்பியடிக்கும் நம்மவர் அவர்களின் கட்டுப்பாட்டையும், பொறுப்புணர்ச்சியையும் பலமாகக் காப்பியடிக்க முன்வர வேண்டும். நாம் காலத்துக்குப் பொருந்த புத்தக நிலையங்களாகவும், கல்விக் கூடங்களாகவும் செய்து நமது பரம்பரை தர்மக் கடமையை தவறாமல் நிலைநாட்டவேண்டும். குழந்தைபிறந்தால்கோவிலுக்கு மணி வாங்கிக் கட்டுகிறேன் என்று விரதம் செய்வதை மாற்றி 'அறிவுள்ள சேயை எனக்குத்தா, ஆண்டவனே! நான் அறிவுவிளக்கு ஏற்றிவைக்கிறேன்' என்று நூல் நிலையத்திற்கு நூல் வாங்கிக்கொடுக்க வேண்டும். முத்துவும் சுப்புவும் பரீட்சையில் தேறினால் சந்தி விநாயகருக்குப் பத்து தேங்காயும் இருபது தேங்காயும் விடலையாக போட்டி போட்டு எறிவதை விட்டு விட்டு, பரீட்சையில் தேறினால் எங்கள் ஊர் புத்தகசாலைக்கு 10 ரூபாய்க்குபுத்தகம்வாங்கித்தருவேன் என்று சபதம் எடுக்க வேண்டும். திருமணத்தின் போதும், தன் சொந்த சொத்து பாகப்பிரிவினையின் போதும், நம் ஊருக்குச்சொந்தமான புத்தக நிலையத்திற்கும் ஒரு பங்கு சக்திக்குப் பொருந்த உதவுவதை ஒரு விரதமாகக் கொள்ளவேண்டும்." இது 9-5-50ல் நிகழ்த்திய அத்தலைமையுரையின் ஒருபகுதி. 'எனது இலட்சியம்' என்ற ஒரு கட்டுரையில் 'எனது' என்ற சொல் வழக்கொழிந்து 'நமது' என்ற சொல் வாழ வேண்டும் என்ற பொதுவுடைமைக் கருத்தை நகைச்சுவையோடு கூறியுள்ளார்.

தில்லித் தலைநகர், தீரர்வாழ் வங்காளம், செல்வநகர் பம்பாய் திசையெங்கும் சென்றேறி, வங்கக் கடல் கடந்து வளமான தென்னிலங்கைத் தமிழர்க்குக் கலை முழக்கி, காலத்தமிழ் மெழிலின் சிலக்குரல் கேட்க வேற்று நில மாந்தரெல்லாம் வேட்கை மிகக்கொண்டு விரும்பி அழைத்ததனால், இமயமலை தாண்டி இரசிய நாடேகி, சென்ற இடமெல்லாம் செந்தமிழின் சீர் பரப்பி சிரிப்புக் கலைவளர்த்த சேவை சிறிதாமோ? குலுங்கிக் குலுங்கி நின்று குதித்துச் சிரிக்கவைக்கும் அலங்காரப் பாடல்கள் அத்தனையும் மறைந்ததுவே! கொஞ்சும் மொழியெடுத்துக்
குறளிசையைத்தான் பாடு
பஞ்ச நிலக்கிளிதான் பறந்
டிப் போயிற்றே! சுற்று
நாடெல்லாம் சுற்றித் தமிழ
தின் வெற்றிக்கொடி நட்
வீரம் மறைந்ததுவே! காது
கினிய தமிழ்க் கற்பகத்தை
தான்மறந்து, கண்ணுக்கினி
த்மிழ்க்கலைஞர்களை விடுத்
சொல்லுக்கினிய குறள் நால
யைவிட்டு விட்டு, சில்லென்
பூத்த சிறு நெருஞ்சிக்காட்
னுள்ளே, நம்மை நில்லென்
சொல்லி நிறுத்தி வைத்து
சென்றுவிட்டார்.

நகைச் சுவையால் நாட்டை
கவர்ந்து, வள்ளல் தன்மை
யால் வையகப் புகழ் பெற்
இனிய சொற்களால் இரசிய
விலும் உண்ணா விரத வெற்
பெற்று, இகழாமையால் நெ
சத்தகக நட்பு செய்யும் நண்
பர்களைப் பெற்று,

"நகைஈகை இன்சொல்
இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக்
[குடிக்கு"

என்ற வள்ளுவர் வகுத்
வாழும் நெறிபேணி வா
வாங்கு வாழ்ந்த வள்ளல் கலை
வாணர் மறைந்து விட்டார்
'மறைந்து விட்டார்' என்
சொல்லை மனமேற்க மறு
கிறது. இறந்து விட்ட நிகழ்ச்
தனை இருகண்ணால் கண்டிரு
தும் 'இறந்தது பொய் வாழ
கின்றார்' என நினைக்கும் இ
யத்தின் சோகத் துயர்தனை
சொல்வதுதான் எவ்வாறு
'இறக்க வில்லை கலைவாணர்
என்றால் தான் மனம் ஒப்பும்
ஆம்! அந்த சுயமரியாதை
சுடர், பகுத்தறிவுப் பகலவன்
கலங்கரை விளக்கம், நகை
சுவையரசர், நமதருமை அண்
ணன் இறக்க வில்லை, நம்மோடு
கலந்து விட்டார். அவர் வி
டுச் சென்ற பணியை
தொடர்ந்து செய்து, அவ
காட்டிய ஒளிவிளக்குகளை உற
துணையாகக் கொண்டு வழி
நடப்பது தவிர ஏங்கியழும்
நெஞ்சத்தை யாது சொல்லி
தேற்றிடுவோம், யாது சொல்
லித் தேறிடுவோம்!

வாழ்க கலைவாணர் புகழ்!

வளர்க கலைத் தொண்டு!

திருத்தம்

சென்ற 8-9-57 இதழில் 11-ம் பக்கத்தில் "கே. ஏ. அருணாசலம்" என்ற இரங்கற் குறிப்பில், 3வது வரியிலும், 8வது வரியிலும் கே. ஏ. அருணாசலம் என்பதற்குப் பதில் கே. ஏ. முருகேசன் எனத்தவறுதலாகப் போடப்பட்டுள்ளது. தவறுக்கு மிக வருந்துகிறோம். கே. ஏ. அருணாசலம் அவர்களின் மறைவு குறித்து மீண்டும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்பழகன் வழக்கில் வெற்றி!

—(0)—

‘அச்சுப் பிழைகள் வாக்காளர்களின் உரிமையைப் பாதிக்கக்கூடாது’

★

சென்னை எழும்பூர் தொகுதி விருந்து தேர்ந்தெடுக்கப் ட்ட தோழர் க. அன்பழகன் வர்களின் தேர்தலை ஆட்சே த்து எம். இராதாகிருஷ்ண ள்ளை அவர்கள் ஒரு மனு காடுத்திருந்தார். அவ்வழக்கு தர்தல் விசாரணைக் குழு ரு. ஜி. கே. தாமோதரராவ் வர்கள் முன்னிலையில் நடை பற்றது. அந்த வழக்கில் சப்டம்பர் 6-ந் தேதியன்று ர்ப்பு தரப்பட்டது. தீர்ப்பில், சலவுத் தொகையுடன் மனு ள்ளப்பட்டு, அன்பழகன் தர்தல் செல்லத் தக்கதென றுதி செய்யப்பட்டது.

தோழர் அன்பழகன் அவர் ரின் தேர்தலை ஆட்சேபித்து தாழர் எம். இராதாகிருஷ்ண ள்ளை அவர்கள் கொடுத்த னுவில் முக்கியமாகக் குறிப் ட்டிருந்ததாவது! வாக்காளர் ட்டியல் தயாரிப்பதற்கான ட்ட முறைப்படி, 10வது பிரி ன் கீழ் 1956 செப்டம்பர் 1ந் ததி முன்மாதிரியாகத் தயா க்கப்பட்ட வாக்காளர் பட்டி லில் அன்பழகன் அவர்க ன் பெயர் விடப்பட்டுள் து. மறுபடியும் 1956 டிசம் ரில் வெளியிடப்பட்ட கடைசி ான வாக்காளர் பட்டியலிலும் வருடைய பெயர் சேர்க்கப் டவில்லை. அபேட்சகர்கள் தர்தலில் நிற்பதற்காக தங் ள் பத்திரங்களை தாக்கல் செய் ம்படி அழைக்கப்பட்டபின், னது பெயரைச் சேர்க்கும்படி அன்பழகன் கேட்டுக் கொண் டார். வாக்காளர் பெயர்களைப் பதிவு செய்யும் அதிகாரி அந்த மனுவை ஏற்றுக்கொள்ள வில்லை. பிறகு அன்பழகன் அரசாங்கத்துக்கு மனுச் செய்ய, “ஆபிசில் குறிப்புகளை எழுதும் பொழுது அந்தப் பிழை ஏற்பட்டிருந்தால் அதற்கான திருத்தத்தை வாக்காளர் பெயர்களைப் பதிவு செய்யும் அதிகாரி செய்யலாம்; அப்பொழுது, அச்சுப் பிழையின் காரணமாகத் தவறு ஏற்பட்டிருந்தால் முதலில் அனுப்பப்பட்ட மூலப் பிரதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்” எனவும் அரசாங்கம் தனது குறிப்பில் கூறியது. அதன் பேரில் அந்த அதிகாரி மூலப் பிரதிகளை ஒப்பிட்டுப் பார்த்ததில், அன்பழகன் பெயர் தவறுதலாக விடுபட்டிருப்பது தெரிந்து அதைச் சேர்க்க அனுமதி தந்தார். இவ்வாறு அந்த அதிகாரி அனுமதித்தது சரியல்ல என்று தோழர் எம். இராதாகிருஷ்ணபிள்ளையின் மனு இப்பொழுது ஆட்சேபித்தது. அவர் தரப்பில், வழக்கறிஞர் எம். கே. நம்பியார் அவர்கள் வாதாடினர்.

தோழர் அன்பழகன் சார்பில் வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்கள் திறம்பட வாதிட்டார். அவர் வாதத்தில், அன்பழகன் அவர்களின் பெயர் புதிதாகச் சேர்க்கப்படவில்லையென்றும், முதலில் இருந்த பெயர் தவறுதலாக விலக்கப்பட்டதால் அந்தத் தவறைத் திருத்தம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டதென்றும் கூறினர். ஆக புதிதாகப் பெயரைச் சேர்ப்பது என்ற பிரச்சினை எழவில்லை, ஏற்பட்ட தவறு திருத்தப்பட்டது. அதற்கான சட்டபூர்வமான அதிகாரம் குறிப்பிட்ட அதிகாரிக்குத் தரப்பட்டிருக்கிறது, அந்த அதிகாரத்தின் கீழ் அவர் அந்தத் தவறைத் திருத்தினர். 1957 ஜனவரி 28ந் தேதி தவறு திருத்தப்பட்டதும், அன்பழகன் அவர்களின் அபேட்சகர்தான் சட்டப்படி செல்லுபடியானதென்று வழக்கறிஞர் வி. பி. இராமன் எடுத்துக் காட்டினர். மேலும், இத்தகைய தவறுகளைத் திருத்தவே அந்தச் சட்டத்தில் 23 சட்டப்பிரிவின் பகுதி போடப்பட்டிருப்பதாகவும், அந்தச் சட்டப்பிரிவின்படி தேர்தல் அதிகாரி செய்த திருத்தம் முற்றிலும் சரியானதென்றும் பல ஆதாரங்களையும் சட்ட மேற்கோள்களையும் எடுத்துக்காட்டி, கடைசியாக “ஆபிசில் ஏற்படுகிற தவறுக்கோ, அச்சுக்கோர்ப்பவர்கள் செய்யும் பிழைகளுக்கோ, ஒரு வாக்காளரின் உரிமையைப் பலியிடுவது நியாயமுமாகாது, நீதியுமாகாது!” என வழக்கறிஞர் இராமன் தெளிவுறுத்தினர்.

விசாரணைக்குழுவில் அமர்ந்த நீதிபதி அவர்கள் தீர்ப்புத்தரும்பொழுது கூறினர்: “அச்சுப்பிழையால் ஏற்படுகிற தவறுகளைத் திருத்த, சட்டப்பிரிவு23 பகுதிப்படி வாக்காளர் பெயர்களைப் பதிவு செய்யும்அதிகாரிக்கு வேண்டுமளவு அதிகாரம் இருக்கிறது. கடைசியாக வெளியிடப்படுகிற வாக்காளர் பட்டியலில்ஒருவருடைய பெயர் தவறுதலாக விலக்கப்படும் வரிசையில் போடப்பட்டதாக வைத்துக்கொள்வோம். இவர்கள் செய்யும் தவறுகளால், ஒரு வாக்காளர் தனது நியாயமான உரிமையை இழந்துவிட வேண்டுமா? இத்தகைய நெருக்கடிகளைத் தீர்ப்பதற்குத்தான் 23வது சட்டப் பிரிவின்கீழ் புதிய விதி சேர்க்கப்பட்டது. இல்லாவிட்டால், அச்சுக்கோர்ப்பவர்களின் தாட்சண்யத்துக்கு வாக்காளர்களின் உரிமைகளை விட்டுவிடுவதாகும்.”

எம். இராதாகிருஷ்ண பிள்ளை கொடுத்த ஆட்சேபனை மனுவை விசாரணைக் குழு தள்ளிவிட்டு, தோழர் அன்பழகனுக்கு செலவுத்தொகையாக ரூ 250 தரப்படவேண்டும் என்று உத்தரவிட்டது.

இந்த வழக்கில் சட்ட நுணுக்கங்கள் மட்டும் ஆராயப்பட்டதால், சிக்கல் நிறைந்த பல கேள்விகள் எழுப்பப்பட்டன. அவற்றை யெல்லாம் தோழர் அன்பழகன் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் வி. பி. இராமன் திறம்பட விளக்கினர். வழக்கு நடைபெறும்பொழுது கழக அன்பர்களும், சட்டக் கல்லூரி மாணவர்களும், சட்டத்தில் பயிற்சியும் பழக்கமும் உடையவர்களும் நீதி மன்றத்தில் வந்திருந்து வழக்கைக் கூர்ந்து கவனித்து வந்தார்கள்.

நீராவிக் கப்பல் உண்டான கதை-(5)





ராபர்ட் புல்டன் உண்டாக்கிய நீராவிக் கப்பல்கள் அமெரிக்க நாட்டு நதிகளில் உலாவத் தொடங்கின. மற்றும் பலரும் நீராவிக்கப்பல் கட்டும் தொழிலில் ஈடுபட்டு, விரைவில் நதிக் கப்பல்கள் முக்கிய பிரயாண சாதனங்களாயின. சாமான்கள் போக்குவரத்தும் அதிகமானது. மிசசபி போன்ற நதிகளில் உல்லாசம், சீட்டாட்டம், ஆடல் பாடல் இவைகளுக்காக பல வேலைப்பாடான கப்பல்கள் தவழ்ந்தன. சில உல்லாசக் கப்பல்கள் 320 அடி நீளமும் 12 மைல் வேகத்தில் செல்லக்கூடியனவாகவும் இருந்தன.

அடுத்தபடியாக நீராவிக்கப்பல்கள் கடலில் புகத் தொடங்கின. 1816இல் முதல்தடவை நீராவிக் கப்பல் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு, இங்கிலாந்திலிருந்து பிரான்சுக்கு வந்தது. அது பெரிய செயலாகக் கருதப்பட்டது. பிறகு இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கும் மற்றும்பலகண்டங்களுக்கும் நீராவிக் கப்பல்கள் போகத்தொடங்கின. தூரநாடுகளிடை வியாபாரம் பெருகியது. உலகின் அளவு குறுகியது.

ராபர்ட் புல்டன் 1815இல் இறந்தார். அவர் கண்டுபிடித்த முறையில் நீராவிக் கப்பல்கள் வளர்ந்து, இன்று மிகப்பெரும் நீராவிக்கப்பல்கள் அலைகடல்களை அடக்கியாண்டுவருகின்றன. நாலாயிரம் மைல்களை நான்கு நாட்களில் கடக்கக்கூடிய விரைவும் வலிவும் உள்ள கப்பல்கள் வந்துவிட்டன. இந்தப் பெருங்கப்பல்களுக்குஅடிப்படையாக இருந்தது, 1816ல் ராபர்ட் புல்டன் ஓடவிட்ட சிறு நீராவி ஓடம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது! விடா முயற்சியால் உலகுக்கு உதவிய பெரியோர்களில் ராபர்ட் புல்டனும் ஒருவர். (முற்றும்)

“மன்றம்” அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா செழியன், எம். ஏ.—(தொலை பேசி எண்: 55697